# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 306 புரட்டாதி 14ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 01 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## இதுவரை 13 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.1

இலங்கையின் 8ஆவது அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றுவரை 13 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.


எனினும் தெற்கின் பிரபல்யமான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன இதுவரை கட்டுப்பணம் செலுத்தவில்லை.

அரச தலைவர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான வேட்பு மனுத்தாக்கல் இந்த மாதம் 7ஆம் திகதி நடக்கவுள்ளது. தேர்தலில் 23

# த.தே.கூ. ஆதரவை பெறும் ரணிலின் முயற்சி பிசுபிசுப்பு

■ நேற்றைய சந்திப்பில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை

■ தேர்தல் அறிக்கையின் பின்னர் தீர்மானிப்போம் என்கிறது கூட்டமைப்பு



**கொழும்பு, ஒக்ரோபர் 1**

**ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறத் தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கநேற்று எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை.** 23

## திடீரென வெளியான ஆவணம்!

கொழும்பு, ஒக்.1

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்கக் குடியுரிமை நீக்கியமை தொடர்பாக ஆவணம் என்று தெரிவித்து நேற்று மாலை சில ஆவணங்கள் வெளியாகியுள்ளன. எனினும் அது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியாகவில்லை.

கோத்தபாய 23

## நீதிபதிகள் குழாம் முன்பாக கோத்தாவுக்கு எதிரான மனு

### நாளை நடக்கவுள்ள விசாரணையால் ராஜபக்ச அணியினர் அதிர்ச்சி



கொழும்பு, ஒக்.1

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை இலங்கைக் குடிமகனாக ஏற்றுக் கொள்வதைத் தடுக்க வேண்டும் என்று முன்வைக்க மனு, நாளை புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. 3 நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 23

## இறுதியில் வேட்பாளரை மாற்றுமா மகிந்த அணி?

கொழும்பு, ஒக்.1

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பிறிதொரு வேட்பாளரைத் தெரிந்து எடுத்து வைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்று அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 23

## பெரமுனவில் சலசலப்பு!

கொழும்பு, ஒக்.1

அண்மைக் காலச் சம்பவங்களால் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள் இடையே பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டணிப் பேச்சில் இணக்கம் எட்டப்படாமை, மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது என்பன போன்ற 23

## சிறுவர் தினத்தில் உறவுகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.1

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பன்னாட்டுச் சிறுவர் தினமான இன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளோம் என்று அறிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் 8 23

# வடக்கு- கிழக்கில் இராணுவக் கெடுபிடி நேற்று திடீரென வீதிகளில் சோதனை!



யாழ்ப்பாணம், ஒக்.1

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்நேற்றுத் திடீரென வீதிச் சோதனைச் சாவடிகள் அமைத்து இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். திடீரென இராணுவத்தினர் வீதிகளில் நிறுத்தப்பட்டு சோதனைகளை மேற்கொள்வதால் மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

வடக்கில் ஆனையிறவு, யாழ்ப்பாணம், நாவற்குழி ஆகிய இடங்களில் 23



## திடீரெனத் தீப்பற்றி எரிந்த உந்துருளிகளால் பரபரப்பு

யாழ்.ஒக்.1

யாழ்ப்பாணம், மடத்தடியில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு உந்துருளிகளில் பற்றிக்கொண்ட தீ, வீட்டிலும் பரவியது. இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த இரு உந்துருளிகள் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளன. வீட்டிலிருந்தவர்களும், அயலவர்களும் தீயைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் தீ வீட்டிலும் பரவியது. அதையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபைத் 23

## கோத்தபாய வென்றால் தமிழருக்குநன்மையாம்



கோத்தபாய ராஜபக்ச வெற்றி கொண்டால் தமிழர்கள் அஞ்சுவதுபோல் நடக்கமாட்டார் என்று தோன்றுகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

விரிவு பக்.21

# ஹரிஸ்ணவி வழக்கு மீளவும் ஒத்திவைப்பு

வவுனியா, ஒக்.1

வவுனியாவில் 3 ஆண்டுகளுக்கு முன்னர் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 14 வயது மாணவி ஹரிஸ்ணவியின் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வவுனியா, உக்கிளாங் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை,புதுக்குடியிருப்பு

# கேள்வி அறிவித்தல் - 2020

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2020 இலிருந்து 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 01.10.2019 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 14.10.2019 மு.ப 12.00 மணிவரை
(அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 2019.10.15 மு.ப 11.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 2019.10.15 மு.ப. 11.30 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 60,000.00 | 5,990,692.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 16,500.00 | 1,636,690.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 22,000.00 | 2,136,200.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 6,500.00 | 605,000.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,500.00 | 513,225.00 |
| 6 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 183,700.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,500.00 | 1,540,000.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 6,500.00 | 632,500.00 |
| 9 | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 7,500.00 | 731,500.00 |
| 10 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 297,000.00 |
| 11 | மந்துவில் பொதுச்சந்தை | 1,000.00 | 1,500.00 | 111,212.00 |
| 12 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 1,000.00 | 1,000.00 | 26,675.00 |
| 13 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | 1,000.00 | 1,000.00 | 27,610.00 |
| 14 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (01) | 1,000.00 | 1,000.00 | 20,000.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 1,500.00 | 100,287.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,500.00 | 100,350.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 50,850.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 2,000.00 | 193,981.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 168,300.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 3,700.00 | 464,750.00 |
| 7 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,600.00 | 281,050.00 |
| 8 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 21,375.00 |
| 9 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை | 1,000.00 | 1,000.00 | 5,643.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 1,000.00 | 1,000.00 | 94,600.00 |
| 2 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 173,707.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | 231,110.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 1,000.00 | 1,000.00 | 55,791.00 |
| 5 | மாங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 21,375.00 |
| 6 | மாங்குளம் கருவாட்டுக்கடை | 1,000.00 | 1,000.00 | 5,658.00 |

## நியந்தனைகள்

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை தலைவர். பிராந்திய பெறுகைக் குழு. புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2019.10.25 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப் பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.

05. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடைபாதை வியாபார நடவடிக்கை களில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.

06. புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் மாட்டிறைச்சிக் கடைக்கான குத்தகை கேள்விப் படிவமும், புதுக்குடியிருப்பு கோழியிறைச்சிக் கடையினை பெற்றுக்கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் கோழியிறைச்சிக் கடைக்கான குத்தகைக் கேள்விப் பத்திரமும் வழங்கப்படும். எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக் கடைகளின் சித்தியாளர்களுக்கே மந்துவில் மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக்கடை ஆகியவை வழங்கப்படும்.

07. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக்கறிச் சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு, விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00ம் மோட்டார் சைக்கிள் , முச்சக்கர வண்டிகள்.ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு 20.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.

08. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.

09. பொதுச் சந்தையில் மரக்கறி, கடலுணவு வகைகளின் கொள்விலை, விற்பனைவிலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.

10. மரக்கறி, கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.

11. திருமுறிகண்டி பொது மலசலகூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக்கூடாது.(கட்டணத்திற்கான சிட்டை வழங்கப்பட வேண்டும்)

12. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.

13. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.

14. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடைவாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

15. கோழியிறைச்சிக்கடை குத்தகைக்காரர் ஊர்க்கோழிகள் உயிருடன் காட்சிப்படுத்தி உயிருடன் விற்பனை செய்தல் வேண்டும்.

16. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்பட வேண்டும்.

17. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.

18. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.

19. கடைகள் மற்றும் சந்தைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதாக கருதியே குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

20. வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கால்நடைகளைக் கொண்டுவருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

21. இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் மின்சாரம் தேவைப்பட்டால் மின்சாரக் கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பாக சபையினால் கோரப்படும் தொகையினை வைப்பாக செலுத்துதல் வேண்டும்.

22. காதடையாளம் (Year Tag) சுகாதார சான்றிதழ் மற்றும் 1958ம் ஆண்டின் 29ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் 2009.11.26ம் திகதிய 1629/17ம் இலக்க அதிவிசேஷட வர்த்தமானியின் அட்டவணை ஆறாம் இலக்கத்தில் பிரசுரிக்கப்பட்டவாறான விலங்கு உறுதிச்சீட்டு உள்ள மாடுகளையே கொல்களத்தில் காலை ஆறுமணிக்குப் பின்னர் வெட்ட வேண்டும்.

23. கொல்களத்தில் தொழில் புரிபவர்கள் பிரதேச சபையில் முன்னரே பதிவு செய்யப்பட்டிருத் தல் வேண்டும். பதிவு செய்யாதவர்கள் கொல்களத்தில் மாடுவெட்டுதல், மற்றும் ஏனைய பணிகளில் ஈடுபட முடியாது.

24. கொல்களம் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளரால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் சரும நோய்கள், தொற்றுநோய்கள், தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சான்றிதழ் பெற வேண்டும்.

25. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண், பெண் மாடுகள், ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள், ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

26. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.

27. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.செ.பிறேமகாந்,
தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
2019.10.01

(C 11362)(14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழத்து சீரடி சாயி நாதனின் 13 ஆவது வருட திவ்ய பிரமோற்சவம் – 2019

அன்பான அடியார்களே !

| | | |
|---|---|---|
| 01.10.2019 | மாலை 4.00 மணிக்கு | கொடியேற்றம் |
| 02.10.2019 | மாலை 4.00 மணிக்கு | மயூரவாகனம் |
| 03.10.2019 | மாலை 4.00 மணிக்கு | மஹாபத்மாசனம் |
| 04.10.2019 | மாலை 4.00 மணிக்கு | ஹம்சவாகனம் |
| 05.10.2019 | மாலை 4.00 மணிக்கு | தண்டிகை |
| 06.10.2019 | மாலை 4.00 மணிக்கு | சுவானவாகனம் |
| 07.10.2019 | மாலை 4.00 மணிக்கு | திருமஞ்சம் |
| 08.10.2019 | மாலை 4.00 மணிக்கு | தெற்போற்சவம் |
| 09.10.2019 | மாலை 4.00 மணிக்கு | கைலாயவாகனம் |
| 10.10.2019 | மாலை 4.00 மணிக்கு | வேட்டைத்திருவிழா |
| 11.10.2019 | மாலை 4.00 மணிக்கு | சப்பைரதம் |
| 12.10.2019 | காலை 7.00 மணிக்கு | தேர்த்திருவிழா |
| 13.10.2019 | காலை 7.00 மணிக்கு | தீர்த்தம் |
| | மாலை 5.00 மணிக்கு | கொடியிறக்கம் |
| 15.10.2019 | மாலை 5.00 மணிக்கு | லெண்டி தோட்ட உற்சவம் |



**11.10.2019 வெள்ளிக்கிழமை**
**இரவு 7.00 மணிக்கு**
**"மடத்தார் பதிவாழ் மன்னவனே"**
இறுவெட்டு வெளியீடு
இடம்பெறும்.
அனைவரும் வருக !
பாபா அருள்பெறுக.

**"ஏழத்து சீரடி சாயி மந்திர்"**
**314, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**
**0777 222 568**

(CS 24056) (14.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
# சண்முகராசா பார்த்தீபன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 10 . 1987 | 11 . 10 . 2018 |



திதி : 01.10.2019

ஆறாத்துயர் சுமந்து ஆண்டொன்று ஆனதுவோ .......?
உழைப்பையே உரமாக்கி உதிரத்தை வியர்வையாக்கி
தரணியிலே நாம் வாழ வலிகளை சுமந்த உன்னை
அநியாயமாக இறையடி சேர்த்தாரோ .........

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**குடும்பத்தினர்.**
**சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.**

(CS 24068) (14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லை.்.ப்

## தனது இரண்டாவது பெரிய கிளைக் கட்டிடத்தை யாழ் நகரில் திறந்துள்ளது.






நாடு முழுவதும் பல கிளைகளோடு செயற்படும் நாம், மேலதிக இடவசதிகளோடு இப் புதிய கிளைக் கட்டிடத்தை யாழ்ப்பாணத்தில் நிர்மாணித்துள்ளோம். இல. 37, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இக்கட்டிடம் சூழலுக்கு நட்புறவாகக் காணப்படும் பல்வேறு அம்சங்களைக் கொண்டது. இலங்கையின் ஆயுள் காப்புறுதிச் சந்தைத் தலைவரின் சிறந்த சேவையினை அனுபவிக்க உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 461 461 அல்லது பிரவேசியுங்கள் **www.ceylincolife.com.**

எமது சொந்தக் கட்டிடங்களில் சில...



சிலாபம் கிளை



கடவத்தை கிளை




ஹொரண கிளை



வெள்ளவத்தை கிளை

WORLD FINANCE
BEST LIFE INSURANCE COMPANY SRI LANKA
2018
CEYLINCO LIFE INSURANCE



இலங்கையில் அதிக பாராட்டுக்குரிய ஆயுள் காப்புறுதி நிறுவனம்



தொடர்ச்சியாக 13 வருடங்களாக மக்கள் அபிமானம் பெற்ற காப்புறுதி நிறுவனம்.

செலிங்கோ லை.ப் காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது (PB5183)



**CEYLINCO LIFE®**

வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலிங்கோ லை.ப் காப்புறுதி நிறுவனம், செலிங்கோ லை.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5. கம்பனி பதிவு இல PB5183 தொ.இல: (011) 2461461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

**01.01.2020 முதல் 31.12.2020 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 01.10.2019 – 14.10.2019 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 15.10.2019 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 15.10.2019 மு.ப 10.30 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 11,053,100.00 | 110,500.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,565,100.00 | 15,700.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 915,750.00 | 9,200.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,321,200.00 | 13,200.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 83,600.00 | 800.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 51,150.00 | 500.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 27,500.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 26,200.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 12,650.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 19,800.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 17,600.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 16,500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 106,500.00 | 1,100.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,300.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 186,800.00 | 1,900.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 276,400.00 | 2,800.00 | 750.00 |
| 17 | கைதடிப் பொதுச்சந்தை | 22,100.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 319,800.00 | 3,200.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 63,800.00 | 600.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,400.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,950.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 33,000.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 4,400.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 5,600.00 | 500.00 | 750.00 |
| 25 | நாவற்குழி மீன்சந்தை | 11,100.00 | 500.00 | 750.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 01.10.2019 தொடக்கம் 14.10.2019 வரையான காலப் பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணி மனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 15.10.2019 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர் /செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

01.10.2019

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கார்த்தி சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - டிறிபேக் கல்லூரி)

நீதி:- திருநீயை



எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
பேணிப்பாதுகாத்து
எம்மை வழிநடத்தி இன்று வானுறையும்
தெய்வமாகி விட்டீர்கள்
காலங்கள் பல கடந்தாலும்
எங்கள் உயிருள்ளவரை எங்கள்
நினைவில் என்றும் நிலைத்திருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 26.05.1932 — மறைவு 04.10.2016

அரசடி சந்தி, கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்,
077 468 3019

## மனித உரிமை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி
## Certificate Course for Human Rights
### பிரிவு IV ஆரம்பமாகிறது

'மனித உரிமைகள் பற்றிய அறிவு உடையவரே உன்னதமான சமூகப் பணியாளராக முடியும்'

**யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்தும் மனித உரிமைகள் தொடர்பான குறுங்கால சான்றிதழ் கற்கைநெறி**

**யாழ் மாவட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வலுப்படுத்துதல் மற்றும் ஆளணியை அதிகரிப்பதற்கான பயிற்சி நெறி.**

**யார் விண்ணப்பிக்க முடியும்:**


1. மனிதவுரிமைச் செயற்பாட்டில் அக்கறையுள்ள அரச உத்தியோஸ்தர்கள்.
2. தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கத்தினர்.
3. சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்.
4. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள்/ தொண்டர்கள்.
5. சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள்.
6. பல்கலைக்கழக மாணவர்கள்.

**இடம் : யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
**காலம் : ஐப்பசி 19 – பங்குனி 2020 வரை.**
**(04 மாதங்கள் - 80 மணித்தியாலங்கள்)**
**நேரம் : சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை**
**முழுப்பயிற்சிக் கட்டணம் ரூபா 6500/=**

முன்னணி மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்துறை சார்ந்தோர் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் பணியாளர்களால் பயிற்சிகள் நடத்தப்படும். ஒரு பிரிவில் முப்பது பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். தங்கள் சுயவிபரங்களை 15.19.2019ம் திகதிக்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: திரு.வரதராஜா முருகதாஸ்**
**கௌரவ தலைவர்**
**யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்**
**76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 3668**

## மரண அறிவித்தல்



## கந்தப்பு தாமோதரம்பிள்ளை

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு தாமோதரம்பிள்ளை 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெகசோதியின் பாசமிகு கணவரும் வேலாயுதபிள்ளை (கனடா), காலஞ்சென்றவர்களான செல்லத்துரை. பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும். ரவிராஜ் (நோர்வே). வசந்தி (சுவிஸ்). காலஞ்சென்ற ஜெகராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுனித்தா. (நோர்வே) செல்வக்குமரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்ஷயா (நோர்வே). அபிலாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் பாலசிங்கம். மலர்சோதி. தங்கராசா. பவளம். ரவிந்திரராசா. காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புலவர் வீதி, நவாலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 665 5636 - வசந்தி (மகள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation for Bids (IFB)

**National Shopping**

**Procurement of Supplying and Installing of Desktop Computers and Server at University College of Jaffna.**

**Bid No : UCJ/3/3/9-Com/2019/2**

1. The Director, University College of Jaffna, #29, Brown Road, Kokuvil, now invites sealed bids from eligible and qualified bidders for supplying and installing of desktop computers and server at University College of Jaffna.

| Description of Goods | Items | Qty | Bid Security Rs. | Non Refundable Fund Rs. |
|---|---|---|---|---|
| Computer & Accessories | Desktop Computer (i5) Headset, Hard disk, RAM, CMOS Battery | 20 | 48,000.00 | 1000.00 |
| Server Computer | Server, Monitor, Ups | 01 | 9,000.00 | |

2. Bidding will be conducted through National Shopping (NS)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted.
4. Interested bidders may obtain further information from the procurement unit, University College of Jaffna and inspect the Bidding Documents at the same address on any working day from 9.00 am to 3.00 pm from 01.10.2019. Contact numbers are : Phone - 021 221 7791/ 021 221 7794
5. A compete set of bidding Documents in English language may be obtained by interested bidders from the procurement Unit, University College of Jaffna, on working days from 02.10.2019 to 16.10.2019 between 9.00 am to 3.00 pm on the submission of a written request with a certified copy of business registration certificate and upon payment of a non - refundable fee as described in the schedule above.
6. Sealed bids shall be sent by registered post addressed to the Chairman, Procurement Committee, University College, Jaffna on or before 3.00 pm on 17.10.2019. Late bids will be rejected. Bidders should write the goods description and bid. no on the top left hand corner of the envelope. Bids will be opened at 3.15 pm at same day in the presence of the bidders or bidder's representatives who choose to attend.
7. Bid shall be valid for a period of 63 days from the last date fixed for receiving of bids or any extended period & bid security should be valid for 105 days from the bid opening.
8. Procurement committee will keep the right to make final decision in regard to accept or reject Bids.

**Chief Executive Officer,**
**University College of Jaffna,**
**No.29, Brown Road,**
**Kokuvil.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 07 . 1941

மறைவு 30 . 09 . 2019

## திருமதி. தயாரதி சீவரட்ணம்

கொழும்பை வசிப்பிடமாக கொண்ட திருமதி. தயாரதி சீவரட்ணம் அவர்கள் 30.09.2019 அன்று திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சீவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மேர்வின் சீனித்தம்பி – மீனாட்சி பொன்னையா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தயாநிதி செல்வநாயகம், பொன்னையா தயாபரன், பொன்னையா தயாநேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார். நடைபெறும் இறுதிக்கிரியைகள் 03.10.2019 ( வியாழக்கிழமை ) பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல். Dr.செல்வநாயகம் நிரஞ்சன் (பாபு) - மகன்
No.15,Palm Grove,Colombo - 03. Tel : 0112 573496

# மரண அறிவித்தல்

## ரங்கசாமி இரவீந்திரராஜா



தோற்றம் 05.01.1970 மறைவு 29.09.2019

கற்குழி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கென்ஸ்மன் லேன், டச்சு வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ரங்கசாமி இரவீந்திரராஜா 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரங்கசாமி - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் இராஜகோபால் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் வனஜாவின் அன்புக் கணவரும் அபிசாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுரேஸ், மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தி, ரோகினி, செந்தில்நாதன் (லண்டன்), கேமநாதன், ஏகநாதன், கிருஜா, சாந்தி (சுவிஸ்), கவிதா, தஜினி, ரேணுகா, குஞ்சன், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கீர்த்தன், கனிவிழி, அமுதவிழி, அறிவுக்குமரன் ஆகியோரின் சித்தப்பாவும் கோசிகா, திசோன், மதுசன், தருணியா, நிமல், பிரதீப், இராசா ஆகியோரின் மாமனாரும் வருண், பவிசன், விதுசா, அபிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கென்ஸ்மன் லேன்,**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**

(00695)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை வர்ணகுலசிங்கம்

மண்ணில் 01.01.1943

விண்ணில் 30.09.2019



6ஆம் வட்டாரம், கட்டுக்குளம், திரியாயைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வர்ணகுலசிங்கம் நேற்று (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை-காளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஸ்வநாயகியின் அன்புக் கணவரும், சாந்தகுலசிங்கம், வள்ளிநாயகம், யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியரூபி, சத்தியவேணி, திருமால் (இந்தியா), சத்திய வதனி, பிரதீபன் ( PVR நகைக்-கடை, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவேந்திரன், தவநேசன், விஷ்ணுதாசன், சஞ்சயனி, மதிவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிபிரசாத், மதுசங்கரி, கீர்த்தனன், மோஷிகா, கிருஷிகன், துவேனுஜன், அக்ஷயன், பிரதீஸ், வர்ஷனா, சுபக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவலோநாயகி, மகாலிங்கம், கிருஸ்ணசாமி, லிங்கரெட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2019) செவ்வாய்க்கிழமை இல.65/ A. கணேஸ் கார்டின், கண்டி வீதி, திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக திரியாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**40, யமுனாவீதி,**
**நல்லூர்.**

**தகவல் : மருமகன் விஷ்ணு.**
**விஷ்ணு நகைத் தொழிலகம்,**
**224/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/28409)(II.17)

**077 729 3676**

# மரண அறிவித்தல்

## கந்தையா சச்சிதானந்தன்



தோற்றம் 21.12.1928 மறைவு 29.09.2019

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கேணியடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சச்சிதானந்தன் அவர்கள் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தில்லையம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களின் தமையனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி, ஜெகதீசன், தயாபரன், பத்மஜெயந்தி மற்றும் மனோகரன், துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ரேணுகாதேவி, தனறஞ்சினி, சியாமளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரசாத் - லோஜினி, ஜெசிந்தியா - செல்வமனோகரன், உருத்திரா, உமாசங்கரி - பிரஷாந்தன், உதயன், டமேஷா, பானுஷா - விஜயரூபன், நிஷாந்தன், விதுஷன் ஆகியோரின் பேரனும் திலாம்சன், கீர்த்திகன் ஹரிணி, தரங்கிணி, அனாமிகா, அபூர்வா, ஆதிரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2019 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**141, கேணியடி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/28411)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**திருமதி செ.ஜெசிந்தியா**
**021 222 6416**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவர் **திரு.த.ரவிச்சந்திரன்** அவர்களின் தந்தை **சுப்பையா தர்மலிங்கம்** அவர்கள் 29.09.2019 அன்று அமரத் துவமடைந்த தையிட்டு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளை நிர்வாகசபை உறுப்பினர்கள். அங்கத் தவர்கள் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், நிர்வாகசபை உறுப்பினர்கள்**
**அங்கத்தவர்கள், தொண்டர்கள், பணியாளர்கள்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத் தவரும் கலைப்பீடத்தின் கல்வியியல் துறையின் முன்னாள் துறைத்தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான

செல்வி
**சுசிலாதேவி அருளானந்தம்**

அவர்கள் கடந்த 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கல் விச்சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

முு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)




### திரு.கு. தர்மகுமார்

அவர்கள் அதிபர் சேவை தரம் III இல் 01.10.2019 தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார். இவர் அதிபர் சேவையில் சிறப்பாக சேவையாற்ற மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கல்லூரி நல்லுறவுக் கழகம்
மு/ மல்லாவி மத்திய கல்லூரி.

## மரண அறிவித்தல்



### திருமதி லோகலீலாவதி சுந்தரம்பிள்ளை

வேலணையைப் பிறப்பிடமாகவும். காலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகலீலாவதி சுந்தரம்பிள்ளை 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதி களின் சிரேஷ்ட புத்திரியும். காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் பாசமிகு மனைவியும். நாகரூபன் (ஜேர்மனி). நாவேணி (ஆசிரியர்). தர்சினி. நாகசொரூபன் (மணியம் ஸ்ரோஸ் - காலி). நிஷாந்தினி. வினோதினி (சுவிஸ்). சிவானி (அபிவிருத்தி உத்தியோகத்தர். கச்சேரி. காலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ஜெகதா. கண்ணதாசன். சசீலன். பிரதீபன். ஜெயாழினி ஆகியோரின் அருமை மாமியாரும். லோகிஷா. ஷஸ்வின். ஷஸ்வினா. ஆத்மீகன். சதுர்ஷிகன். தஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2019) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலி தடலை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/2, தக்கியா றோட்,
தலாப்பிட்டிய, காலி.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 375 1229**

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா குகதாசன்**
**(பிரபல கட்டட கலைஞர்)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.11.1937 | 30.09.2000 |

திதி:- வளர்பிறை திருதியை

ஆண்டுகள் பத்தொன்பது பறந்தோடியதுவே
ஆனாலும் ஆறவில்லை நின் நினைவுகள் அப்பா
ஆளுமையின் சிகரமாய் இருந்து எம்மை
ஆற்றல் உள்ளவராய் வளர்த்தெடுத்தீரே அப்பா

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் நீக்கமற வாழ்ந்திடுவீர்!

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

கேமாலயம்,
அல்வாய் தெற்கு.
மனோகரா, அல்வாய்.

## மரண அறிவித்தல்



### திருமதி யோண் மேரி மாகிறேற்

குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோண் மேரி மாகிறேற் 28.09.2019 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

எமது தாயாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

(CS 28408)(14,17)

தகவல் : குடும்பத்தினர்.

மு.ஆனந்தராஜா - 077 1145693/
தே.அல்போன்சா - 077 886 9349/
யோ.றொகான் - 077 9905527

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 03 . 1962 | 30 . 09 . 2019 |



### திருமதி சித்திரா பொன்னுத்துரை

கைதடி மேற்கைப்பிறப்பிடமாகவும் லண்டன் சவுத்விம் புல்டனை வசிப்பிடமாகவும் தற்போது நாவற்குழிச்சந்தியில் வசித்தவருமாகிய திருமதி சித்திரா பொன்னுத்துரை நேற்று (30.09.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் மற்றும் நாகம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மாவின் அன்பு மருமகளும் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சிவநாயகி (கனடா). லோகிதாஸ் (சுவிஸ்). ஜெயதாஸ் (கனடா). தயா (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும் சுகந்தா (சுவிஸ்). ஈஸ்வரி (கனடா). சின்னத்துரை (கனடா). சுசிகரன் (லண்டன்). காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை. செல்லத்துரை மற்றும் சறோஜினி. செல்வம். நந்தாவதி. இராசதுரை (இராசன்). புவனேஸ்வரி. நாகேஸ்வரி. இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கைதடி ஊரியான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மைதானம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

யாழ்ப்பாணம்கனகரத்தினம்மத்தியமகா வித்தியாலயத்தின்சீரமைக்கப்பட்டமைதா னம் இன்று மாணவர்களிடம் கையளிக் கப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர்திருமதிலு.மகேஸ்வரன்தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புநாடாளுமன்றஉறுப்பினர்ஈ.சரவ ணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராகயாழ்ப்பாணம்மாந கர சபை உறுப்பினர் திருமதி நளினா பிரேம்லால்கலந்துகொள்ளவுள்ளார். (எ)

## சிறுவர் முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.1

காங்கேசன்துறை,கலாவல்லிமுன்பள்ளி யின் சிறுவர், முதியார் தின விழா இன்று காலை முன்பள்ளி வளாகத்தில் நடை பெறவுள்ளது.

காலை10.20மணிக்குகலாவல்லிசனச மூக நிலையத் தலைவர் வ.பிரபாகரன் தலைமையில் ஆரம்பமாகும் நிகழ்வுக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவ சிறி முதன்மை விருந்தினராகவும், வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன்சிறப்புவிருந்தினராகவும், கிராம அபிவிருத்திஉத்தியோகத்தர்சு.அன்றூ, ஜே/247 கிராம அலுவலர் மு.வைகுந் தன், அபிவிருத்தி அலுவலர் ப. இளங் கீரன்,சமுர்த்திஅலுவலர்சு.சுதர்சன்ஆகி யோர் மதிப்புறு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (எ)

### தேங்காய் விற்பனைக்கு

தோலுடன் தேங்காய் மற்றும் நாற்றுத் தேங்காய் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 077 921 3835**

### Rent

Room for Rent at Kokuvil. for University Students 1.5km from university opposite to kokuvil.

Petrolset, K.K.S. Road. 0776062716

### விற்பனைக்கு உண்டு

நல்லின தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.

**077 226 2572** (dkt 324) (13)

### விற்பனைக்கு உண்டு

நல்ல இன கமுகம்பிள்ளை விற்பனைக்கு உண்டு.
(CS/28401)

**0779363057**

### வாடகைக்கு

10000 L கொள்ளவுடைய லொறி பவுசர் ஒன்றும் 4000 L கொள்ளவுடைய டக்ரர் பவுசர் ஒன்றும் வாடகைக்கு விடப்படும்.

**0771165968** (00693)

### வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து முதியவரை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

**077 753 1339** (N-11363) (14.17)

### வேலையாட்கள் தேவை

செனறு என்டர்பிறைசின் யாழ்ப்பாண கிளைக்கு பண வசூலிப்பாளர்கள் யாழ். மாவட்டம் முழு வதும் தேவை. அடிப்படைச் சம்பளத்துடன் திறமைக்கேற்ப மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (00696)

**0778497113 /0753444111**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23.06.1987 — இறப்பு 12.10.2018

### முருகையா சுகந்தினி

திதி: திருதியை


பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### இராசப்பு கத்தறீனா



பிறப்பு 05.05.1928 — இறப்பு 30.09.2019

நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசப்பு கத்தறீனா கடந்த (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்ரனிகுறூஸ் (அருமைத்துரை-சுவிஸ்), யேசுதாஸ், அருள்நேசன் (ஜேர்மனி), பொலின், காலஞ்சென்ற செலின் (ஜேர்மனி), சாளின் (பிரான்ஸ்), பிறேமானந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுசீலா (சுவிஸ்), சின்ரி, வசந்தி (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஏசியன்), ராஜரட்ணம் (ஜேர்மனி), சுரேந்திரன் (பிரான்ஸ்), பெலானி (பிரான்ஸ்) ஆகியோரின் பாமிசமிகு மாமியும், மீரா, சாரு, Dr.ஜான்சன், ஜான்றோன், தீபக், ஜெனியா, சிறான், சத்தியா, கிறிஸ்ரி, ஸ்ரிபனி, ஸ்ரெறான், பிறியோன், பிராயன் ஆகியோரின் பேர்த்தியும், கிரிஸ், றியா, யோயல் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி 01.10.2019 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி சென்.பீற்றேஸ் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நவாலி சென்.பீற்றேஸ் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(CS/28406)

தகவல்:
குடும்பத்தினர்.
0774071274

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி ஆனந்தவேல் (வெள்ளை)



அன்னை மடியில் 1945.08.20 — ஆண்டவன் அடியில் 2013.10.07

திதி:
திருதியை (01.10.2019) செவ்வாய்க்கிழமை

அல்லும் பகலும் பிள்ளைகளின்
உயர்ச்சிக்காக அயராது உழைத்த ஐயாவே!
நவராத்திரி மூன்றாம் நாள் உங்கள்
நினைவு முருகன் பாத மலரில் உங்கள்
ஆத்மா சாந்தி பெற முருகனையே
வேண்டித்துதிக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் மறவாத நினைவுடன்
குடும்பத்தினர்

7ஆம் கட்டையடி, தொண்டைமானாறு

## மரண அறிவித்தல்

### V.K. கானமூர்த்தி நாகலக்ஷ்மி

(அகில உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர சக்கரவர்த்தி V.K. கானமூர்த்தியின் அன்பு மனைவி)



கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட V.K **கானமூர்த்தி நாகலக்ஷ்மி** நேற்று (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

021 222 5768 CS27775(16/17) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி செல்லம்மா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா கடந்த (29.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் பூபாலசிங்கம், அன்னலிங்கம் (யாழ்ப்பாணம்), சிவலிங்கம் (கொழும்பு), தனபாலசிங்கம் (மட்டக்களப்பு), செல்வராணி (கொலன்ட்), திருச்செல்வம் (சுவிஸ்), சந்திரமலர் (பிரான்ஸ்), சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சுசிகலா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காளிங்கேஸ்வரி, விஜயகுமாரி (யாழ்ப்பாணம்), பவானம் (கொழும்பு), ஜெயக்குமார் (கொலன்ட்), கௌரீஸ்வரி (சுவிஸ்), பாஸ்கரன்(பிரான்ஸ்), திருமகள் செல்வி (பிரான்ஸ்), ஹரிராம்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாத் (பிரான்ஸ்), கிரிசாத் (யாழ்ப்பாணம்), தனுஜா-மதுசூதனன் (பிரான்ஸ்), பகிஜா, மதுஜா.பிரிஜா- மதிகரன் (யாழ்ப்பாணம்), சதீஸ்-செந்தூரி (பிரான்ஸ்), சிந்துஜன் (கொலன்ட்), துளசிகா, கீர்த்திகா, திஷாந்தன் (பிரான்ஸ்), ஶ்ரீகா.ஜெயஶ்ரீ (கனடா), சபரீஷன் (பிரான்ஸ்), விபூஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மத்தியாஸ் (பிரான்ஸ்), அஸ்னிகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2019) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
072 435 9426, 076 607 9705

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி நாகரத்தினம்

மயிலங்கூடல் இளவாலையைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நாகரத்தினம் நேற்று 30.09.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர், லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் நாகரத்தினத்தின் (லங்கா சீமெந்துக்கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் ஞானரூபி (லண்டன்) சுபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், சங்கானை), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஶ்ரீரஞ்சிதகுமார் (லண்டன்), கருணாகரன், கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசமலர், இராசலட்சுமி (ஓய்வுநிலை உப அதிபர், கீரிமலை நகுலேஸ்வரா ம.வி), சுகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சரஸ்வதி, விமலதாஸ்(கனடா), சரோஜாதேவி, வாமதேவன், மல்லிகாதேவி, அருமைநாயகம், பற்குணராசா, செல்வமலர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரம்யா, பிரவீன், அபிநாஸ் (லண்டன்), ஜஸ்மிகா, சாயீசன், அஞ்சை (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2019) புதன்கிழமை ந.ப 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூத்தோர் என்போர் எமது முதுசொம்!

**எஸ்.எஸ்.ஸ்ரீனிவாசன்**

பன்னாட்டு முதியோர் தினம் உலகம் முழுவதும் ஒக்ரோபர் மாதம் முதலாலாம் திகதி (இன்று) சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதிலும் உள்ள மூத்த குடிமக்களை மதிக்கவும் மரியாதை செலுத்தவும், தேசத்துக்கும் சமூகத்துக்கும் குடும்பத்துக்கும் அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்து மதிப்பளிக்கும் வகையிலும் அவர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம், வல்லமை மற்றும் சாதனைகளை ஏனையோரும்பார்த்துக் கற்றுக்கொள்ளவும் அதனை மக்களுக்கு எடுத்துரைக்கும் நாளாகவும் இந்த நாள் அமைகிறது.

பொதுவாக 60 வயதைக்கடந்த ஆண், பெண் இருபாலாரும் மூத்த குடிமக்கள் எனப்படுகின்றனர். இன்று இலங்கையில் அவர்களின் நலனைப்பாதுகாக்கவும் உரிமைகளை வென்றெடுக்கவும் முதியோரை மதிக்கவும் எனப் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அதன்மூலம் மூத்தோர் சமூகம் அடையும் பயன்களும் பெருமிதங்களும் நாம் அறிந்ததே. நாடென்றளவில் அரசு தனது பங்கினை ஓரளவேனும் நிறைவேற்றிய வண்ணம் உள்ளது. ஆனால் வீடென்றளவில் அனைத்து குடிமக்க ளின் மதிப்பினையும் மாண்பையும் பேணி பாதுகாப்பளித்து உணவு உடை வழங்குவது மட்டுமல்ல அவர்களின் மனநிலை அறிந்து மகிழ்வாகப் பேணிப்பாதுகாப்பதும் அரவணைத்து வைத்திருப்பதும் முழுமை பெறுகிறதா என்ற வினா எழுகிறது.

## முத்தோரை மதிப்பது அவசியம்

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை அருளிலார்க்கு மறுவுலகில்லை எனச் சொல்வதுபோல் முதுசொம்களாகிய மூத்தோரை வணங்கி மதித்து வாழ இந்தச் சமூகம் பழகிக்கொண்டால் ஈரேழுபிறப்பிலும் உயர்வான வாழ்வை நாம் அனுபவிக்கமுடியும்.

மாதா- பிதா- குரு- தெய்வம் என்ற முதுமொழியைப் பேணிப் பாதுகாப்பவன் சமூகத்தில் உள்ள அத்தனை பெரியோரையும் மதிப்பான். அம்மா தலைமுறை மாற்றத்தை உண்டாக்குபவள். உலகுக்கு எம்மை ஈன்றெடுத்தவள். அம்மா என்ற சொல்லில் 'அ' என்பது உயிரெழுத்து 'ம்' என்பது மெய்யெழுத்து மா என்பது உயிர்மெய்யெழுத்து உயிராகி ஊனாகி உடலாக எம்மை பூவுலகுக்கு ஈன்ற தாயை நாம் மதிக்க வேண்டும். கண்களை விளக்காக்கி கைகளைத் தொட்டிலாக்கி குருதியைப் பாலாக்கி எம்மை வளர்த்தவள் தாய். இதனால் தான் 'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்' 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'மாதா வயிறெரிய வாழாய் ஒருநாளும்' 'அன்னையைப் போற்றி வீழ்ந்தவனும் இல்லை அன்னையைத் தூற்றி வாழ்ந்தவனுமில்லை' 'தாயிற்சிறந்த கோவிலுமில்லை' என்ற வாசகங்கள் நிஜங்களாக மனதில் என்றும் நிழலாடுகின்றன.

> உயிருடன் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பொறுப்பு இருப்பதை உணர வேண்டும் மிகப்பெறுமதியான ஆசிர்வாதத்திற்குரிய மூத்தோரின் விருப்பத்திற்கு பாதையை திறந்து விடப் போகின்றோமா அல்லது மூடிய பாதைக்குள் முதுமையடையப் போகும் நாமும் முட்டிக்கொள்ளப் போகின்றோமா?

## மாற்றம் அவசியம்

இலங்கையில் 60 வயதின்மேல் மூத்தோர்களாக 25 லட்சம் பேர் வாழ்கின்றார்கள். மூத்தோர்களில் முதியோர் இல்லங்களில் தேவையானவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளமுடியும். வீடுகளில் உறவினர்கள் அல்லது பிள்ளைகள் அயலவர்கள் மூலம் மூத்தோர்களைப் பராமரிக்கும் கட்டமைப்பே நிலைத்த தன்மைக்குரியது. மதிப்பு சுயாதீனத்தன்மையுடன் மூத்தோர் வாழ்வதற்கு நாம் தான் வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். உயிருடன் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பொறுப்பு இருப்பதை உணர வேண்டும் மிகப்பெறுமதியான ஆசீர்வாதத்திற்குரிய மூத்தோரின் விருப்பத்துக்குப் பாதையைத்திறந்து விடப்போகின்றோமா அல்லது மூடிய பாதைக்குள் முதுமையடையப் போகும் நாமும் முட்டிக் கொள்ளப் போகின்றோமா? உலகில் மூத்தோர்கள் மிக மகிழ்வாக இருக்கும் நாடு டென்மார்க் ஆகும். மூத்தோர் மகிழ்வாக வாழும் நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைத்துக் கொள்வதில் எங்களது நடத்தையில் மாற்றங்களும் தேவை. சிறப்பான ஒரு சிந்தனைப் பிறழ்வை எங்கள் மனங்களும் ஏற்படுத்திக்கொள்ளட்டுமே.

மாவட்ட சமூக … 
வவுனியா.

# சிறுவர்கள் நாட்டின் எதிர்கால தூண்கள்

**கந்தையா கனகசபை**

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை பன்னாட்டு அரசுகளும், பொது அமைப்புக்களும், பாடசாலைகளும், தொண்டு நிறுவனங்களும் கொண்டாடி வருகின்றன. பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களின் பட்டியலில் அடக்கப்படுகின்றார்கள். அந்த வகையில் உலக மக்கள் சனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாக உள்ளனர்.

## வினைத்திறனான சமூகத்தை உருவாக்குதல் மிகஅவசியம்

சிறுவர்களே நாட்டின் முத்துக்கள், வருங்காலத் தலைவர்கள். அத்தகைய சிறுவர்களை நாட்டில் வினைத்திறன் உள்ளவர்களாக ஆக்க சிறுவயதில் இருந்தே திட்டமிட்டு அறிவாற்றல் உள்ளவர்களாக பெற்றோர்களால் வளர்க்கப்படல் வேண்டும். அப்படி வளர்த்தெடுக்கத் தவறின் எதிர்கால உலகு கொலை, சிறுவர் துர்நடத்தை, களவு நிறைந்த கலாசார சீரழிவுள்ள சமூதாயமாக அமையலாம். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சிறுவயதில் இருந்தே அறிவைப்புகட்டி, அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் பழக்கி தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். பெற்றோர்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நன்நடத்தைகளைக் கற்று அதனைப் பின்பற்றி ஒழுகித் தங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பெற்றோரின் தீயநடத்தைகள், வேண்டாத பழக்கவழக்கங்கள் சிறுவர்களது மனதைப் பாதிக்கும்.

இது அவர்களது எதிர்கால வழமான வாழ்க்கையையே சீரழிக்கும். தமது அடிப்படை உரிமைகள், தேவைகள் என்பவற்றை சிறுவர்கள் சரியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை பன்னாட்டு சிறுவர் தினம் உணர்த்துகின்றது. 1979ஆம் ஆண்டு பன்னாட்டு சிறுவர் தினம் முதன்முதல் அறவிக்கப்பட்டதில் இருந்து இந்தத் தினம் வருடாவருடம் கொண்டாடப்படுகின்றது. எல்லாக் குழந்தைகளும் வயது, பால், இனம், நிறம், மதம், மொழி என்பவற்றால் வேறுபட்டிருப்பினும் சகல உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்க அவர்களுக்கு உரிமை உண்டு. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர் துர்நடத்தை, பாலியல் சுரண்டல், கடத்தல், விற்றல் என்பனவற்றால் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

> பாதுகாவலர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சிறுவர் சமூகத்தை ஏற்படுத்த அனைவரும் உறுதி பூணுவோமாக.

## ஆரோக்கியமற்ற புள்ளிவிவரங்கள்

இலங்கையிலே ஒவ்வொருநாளும் ஐந்து தொடக்கம் எட்டு சிறுவர்கள் வரை பாலியல் துர்நடத்தைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். இந்தச் சிறுவர் துர்நடத்தை நடவடிக்கைகள் குறிப்பாக நெருங்கிய உறவினர்களாலும், நண்பர்களினாலும், அயலவர்களினாலும் நடைபெறுவதாகவே பன்னாட்டு ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. சிறுவர்களுக்கு பாலியல் ரீதியான அறிவுகள் புகட்டப்பட்டு இந்தப்பாதைக்கு இழுத்துச் செல்லாமல் இருக்க பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும். பெற்றோர்கள், பாதுகாவலர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சிறுவர் சமூகத்தை ஏற்படுத்த அனைவரும் உறுதிபூணுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தமிழர்கள் தேர்தலை புறக்கணிப்பார்களா?

நடக்க இருக்கும் இலங்கையின் அரச தலைவர் தேர்தலைத் தமிழர்களின் நிலைப்பாடு என்ன என்பது வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் காத்திரமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அவ்வளவு காத்திரமான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றபோதும் அதனைத் தமது நலன்களுக்காக வளைத்தெடுக்கும்வல்லமையைத்தமிழ்அரசியல்கொண்டிருக்கவில்லை என்பதும் நிச்சயமான உண்மை. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தமிழர்களின் நிலைப்பாடு என்ன, அல்லது ஆதரவு யாருக்கு என்பது மிகப் பெரிய கேள்வியாக இன்று வரை தொக்கி நிற்கின்றது.

போட்டியில் இருக்கும் இரு முதன்மை வேட்பாளர்களும் தமிழர்கள் கேட்கும் அரசியல் தீர்வு விவகாரத்தில் முழுமையான வாக்குறுதிகளை அளிப்பதற்குத்தயாராக இல்லை. இது விடயத்தில் எந்தவொரு தெளிவான நிலைப்பாட்டையும் அறிவிப்பது ஏதோவொரு விதத்தில் தமக்குப் பாதகமாக அமையும் என்று கருதும் வேட்பாளர்கள் பொத்தம் பொதுவாக இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலான வாக்குறுதிகளையே வழங்கி வருகின்றனர்.

முதன்மை வேட்பாளர்களான கோத்தபாய ராஜபக்சமற்றும்சஜித் பிரேமதாஸஇருவருமேஇந்தஅணுகுமுறையைத்தான்பின்பற்றுகிறார்கள். ஒற்றையாட்சிக்குள் உச்சபட்ச அதிகாரப் பகிர்வு, பொருளாதாரச் சுபீட்சம் ஆகியனதான் அவர்களின் முழக்கம். அவர்கள் கூறும் அதிகாரத்தின் அதிகபட்சம் எந்த அளவு என்பதைத் தேர்தலுக்கு முன்பே தெளிவுபடுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோருகின்றது. அப்படித் தெளிவுபடுத்திவிட்டால் அது சிங்களவாக்குகளைப் பாதிக்கும் என்று கருதும் வேட்பாளர்கள் அதனைத் தெரிவிக்க முன்வருகிறார்களில்லை.

இந்தவிடயத்தில் கோத்தபாயவிடம் இருந்து எப்படியும் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்று தமிழர் தரப்பில் நம்பப்படுவதால் சஜித் ஏதாவது வாய் திறந்தால்தான் உருப்படியான வகையில் இது முன்னகர முடியும். ஆனால், அவரும் வாய் திறப்பதற்குத் தயாரில்லை. அவர் எத்தகைய தீர்வைத் தருவார் என்பது தெரியாமல் அதாவது ஆழமறியாமல் காலை விட முடியாது என்கிறது கூட்டமைப்பு. அத்தோடு முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஏற்கனவே சஜித்துக்கு ஆதரவளித்துள்ள நிலையில் கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு சஜித் ஒரு வேண்டாக் கனி என்றும் கணிக்கப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் தமிழர்கள் தாமாகவே அரசதலைவர் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலை ஏற்படும் என்று டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற இந்திய ஆங்கில ஊடகத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார் இந்தியப் பத்திரிகையாளர் பி.கே.பாலச்சந்திரன்.

வேட்பாளர் சஜித்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஏற்பாடு செய்த கூட்டமும் முழுமையான தீர்வு தொடர்பில் எந்தவித இணக்கப்பாடும் எட்டாது நிறைவடைந்த நிலையில் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணிப்பார்கள் என்கிற பாலச்சந்திரனின் கருத்து நிலை வலுப்படும் சாத்தியங்கள் இருக்கின்றது.

அப்படி ஒருவேளை தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்தால் அது கோத்தபாயவுக்கே சாதகமாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஒருவேளை தமிழர்களின் ஆதரவு இன்றி வெற்றி பெற்றார் என்று வெளி உலகுக்குச் சொல்வதற்கு அது பயன்படக்கூடும். ஆனால், ஒரு தொகுதி மலையகத் தமிழ் மக்களும் சிறு தொகுதியளவிலான கிழக்குத் தமிழ் மக்களும் கோத்தபாயவை ஆதரிப்பார்கள் என்பது உறுதி. எனவே வடக்குத் தமிழர்களின் ஆதரவற்ற அரச தலைவர் என்று வேண்டுமானால் கோத்தபாயவை உலகின் கண் முன் நிறுத்த முடியும். அதனால் தமிழர்கள் அடைந்துவிடப் போகும் அதிகூடிய நலன் என்ன என்று கேட்டால் பெரிதாக எதுவும் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சொல்வதைப் போல, தமிழர் விரோத கோத்தபாய ஆட்சியில் இருப்பதால் தமிழர்களின் நிலை இலங்கையில் ஆபத்தானது என்று உலகின் முன் புலம்ப அது உதவக்கூடும். ஆனால், தமது கண்முன்னே இனப்படுகொலை நடைபெற்றபோது அதனையே அனுமதித்து நின்று வேடிக்கை பார்த்[illegible]த உலகம், [illegible]ழுந்த ஒரு விடயத்துக்காக மட்டும் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நிற்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

**எனவே புறக்கணிப்பு என்பது தமிழர்களின் முன்புள்ள விவேகமான ஒரு முடிவாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.**

# இராஜதந்திர சறுக்கல்




■ உசிலமணி

கையில் கல்லுக் கிடைக்கும் வரை கையில் நாயுடன் பேச்சு நடத்துவதே இராஜதந்திரம் என்று கிண்டலாகக் கூறப்படுவதுண்டு. அதில் உண்மையில்லாமல் இல்லை. அரசியலும் இராஜதந்திரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தவை. இரண்டிலுமே சாணக்கியம் தேவை. அப்படிப்பட்ட சாணக்கியத்துடன் காய் நகர்த்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிக் கொள்கின்றது. ஆனால், அதன் ஊடான பெறுபேறு அல்லது முடிவு என்பது, இந்த அரசியலிலும் இராஜதந்திரத்திலும் கூட்டமைப்பு மண்கவ்வி நிற்பதையே காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தாயக தேசத்தில் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர், ஏற்பட்ட வெற்றிடத்தை கூட்டமைப்பு நிரப்பியது. ஆலை இல்லாத ஊருக்குள் இலுப்பம் பூ சக்கரை என்பது போல, கூட்டமைப்புக்கு அந்தத் தலைமைப் பதவி கிடைத்தது. தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கி, ஆயுதம் இல்லாத சூழலில் சிங்களத்துடன் மோதி வெற்றியூட்டுவதற்கு மதியூகம் மிக்க இராஜதந்திரமும், சாணக்கிய அரசியலும் தேவை. இந்த இரண்டையும் கூட்டமைப்பு இதுவரை நிரூபிக்கவில்லை.

**தவறான முடிவுகளால் பல்வேறு பின்னடைவு**

போரின் பின்னர், முக்கிய தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவுகள் அவர்களையே சுட்டுவிட்டன. சுருங்கச் சொல்லின் வளர்த்த கடா மார்பில் பாய்ந்தற்குச் சமனானது. 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. நீண்ட மிகப் பெரிய எதிர்பார்ப்புடன் அந்தத் தேர்தல் நடைபெற்றது. ஒரு மாகாணசபைக்கான தேர்தலைக் கண்காணிக்க உலகின் பல நாடுகளின் பிரதிநிதிகள் வடக்குக்கு படையெடுத்திருந்தார்கள். வெளிநாட்டு ஊடகங்களின் கழுகுக் கண் பார்வை வடக்கின் மீது திரும்பியிருந்தது. ஒரு மிகப் பெரும் தேர்தலை வடக்கு மக்கள் எதிர்கொண்டிருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஆதரவு அலை என்பது சுனாமி போன்று அடித்திருந்தது.

அப்படிப்பட்டதொரு தேர்தலின் ஊடாகத் தெரிவு செய்யப்படும் தமிழர் அரசுக்கு தலைமை தாங்கக் கூடிய ஒருவர், தகுதியான பொறுப்பானவராக இருக்கவேண்டும். தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் ஊறித் திளைத்தவராக, நிர்வாக வல்லமை படைத்தவராக, போர் தின்ற தேசக்கை [illegible] தையல மீளமைப்பவராக இருக்கவேண்டும். இதற்கு விக்னேஸ்வரன் சரிப்பட்டு வரமாட்டார் என்று கூட்டமைப்புத் தலைமைக்கு பல [illegible] அடித்துச் சொன்னார்கள். தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதமாக நின்றிருந்த கட்சித் தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும், விக்னேஸ்வரனையே களமிறக்கினர். பங்காளிக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட, தமிழ் அரசுக் கட்சியினர் எதிர்த்தபோதும் அவை எவற்றையுமே கணக்கிலெடுக்காது விக்கியைக் களமிறக்கினர்.

காலப்போக்கில் என்ன நடந்தது? கூட்டமைப்பை பார்த்து ஊரே கைகொட்டிச் சிரித்தது. சுமந்திரன், விக்னேஸ்வரன் மோதலைப் பார்த்து சிங்களமே எக்காளமிட்டு மகிழ்ந்தது. விக்கி பிழையான தெரிவு என்பதை காலம், சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும் இடித்துரைத்து உணர்த்தியது.

**அரச தலைவர் தேர்தலில் கூட்டமைப்பின் முடிவென்ன?**

2015ஆம் ஆண்டுக்கான அரச தலைவர் தேர்தலுக்கான பேரம் பேசல்கள் 2014ஆம் ஆண்டு இடம்பெற்றது. சந்திரிகா அம்மையாரின் 'மாஸ்ரர் பிளானில்', மகிந்தவுக்கே தெரியாமல் அவரது அணியின் பொதுச் செயலரை பொது எதிரணி வேட்பாளராகக் களமிறக்கினர். இந்த 'மாஸ்ரர் பிளானில்' பெரும் பங்கு அல்லது அதைக் கொண்டு நடத்தியவர்களில் முக்கியமானவர்கள் சம்பந்தனும், சுமந்திரனும் தான். மைத்திரிபால அறிவிக்கப்பட்ட பின்னர் அவரை, கூட்டமைப்புத் தலைவர்கள் ஆதரிக்கச் செய்வதிலும், குறிப்பாக எந்தவொரு உடன்படிக்கைகளும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் பெரிய பங்கு வகித்தவர்கள் சம்பந்தனும் சுமந்திரனுமே. அவர்களால் தமிழ் மக்களிடம் திணிக்கப்பட்ட மைத்திரிபாலசிறி சேன எப்படி நடந்து கொண்டார் என்பது வெள்ளிடைமலை. இப்போதும் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். கோமாளிகள் கூட தோற்றுப்போகும் அளவுக்கு இருக்கின்றது அவர்களது அரசமைப்பு முரண் நடவடிக்கைகள். தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குப் பதிலாக, இன்னமும் பிரச்சினைகளைக் கூட்டி, இடியப்பச் சிக்கலாக்கி விட்டிருக்கின்றார்கள்.

முக்கியமான தருணங்களில் கூட்டமைப்பு தனது இராஜதந்திரத்தை இப்படித்தான் நகர்த்தியிருக்கின்றது. இப்போது மீண்டும் ஒரு தேர்தல். பல நாடகங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. கூட்டமைப்பு எந்தப் பக்கம் என்பது அந்தக் கட்சிக்கே தெரியவில்லை. இராஜதந்திர ரீதியில், அனுபவசாலிகளான தாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்று அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களில் கூட்டமைப்பு கைகாட்டியவர்கள் எல்லாம் எப்படிப் போனார்கள் என்பது தமிழ் மக்களுக்கு இப்போது பட்டறிந்த பாடம். இனியாவது கூட்டமைப்பு சரியானவர்களை நோக்கிக் கைகாட்டுமா? அல்லது கடந்த காலங்களைப் போன்று கோட்டைவிடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# மாற்றத்துக்காக காத்திருக்கும் இலங்கைத் தீவின் குடிமக்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிகளில் இனிமேல் இலங்கைப் படையினரை ஈடுபடுத்தப் போவதில்லை என்ற ஐ.நாவின் தீர்மானம் மிகவும் பாரதூரமானது. பாரதூரமான குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சவேந்திர சில்வாவை இலங்கையின் இராணுவத் தளபதியாக அரச தலைவர் நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே ஐ.நா. இந்த முடிவை மேற்கொண்டுள்ளது. இதையொரு சாதாரண விடயமாக இலங்கை அரசு வழக்கம்போன்று எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் பன்னாட்டு அளவில் இலங்கைக்கு அபகீர்த்தியை இது ஏற்படுத்திவிட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நிலுவையில் உள்ள நிலையில் புதிய சிக்கலில் அந்த நாடு மாட்டிக்கொண்டுவிட்டது. இது தொடர்பாக இலங்கையின் அயலுறவுத்துறைச் செயலரான ரவிநாத் ஆரியசிங்க நியூயோர்க்கில் உள்ள அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஐ.நா உதவிச் செயலருடன் பேச்சில் ஈடுபடவுள்ளார் என்று தெரியவந்துள்ளது. ஆனால். ஐ.நா. தொடர்ந்தும் இலங்கையின் தவறான செயல்களைப் பொறுத்துக்கொள்ளுமென எதிர்பார்க்க முடியாது.



### பன்னாட்டு எதிர்ப்பு

குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகிய சவேந்திரசில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்தமை தொடர்பாக பன்னாட்டு அளவில் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. வல்லரசு நாடுகள் மட்டுமல்லாது ஐ.நா. பொதுச்செயலரும் இந்த நியமனத்துக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப்போர் இடம்பெற்றபோது இராணுவப் பிரிவொன்றுக்கு சவேந்திரசில்வா தலைமை தாங்கினார். போரில் இறுதிக் கட்டத்தில் பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். படையினரால் அறிவிக்கப்பட்டிருந்த இராணுவ சூனியப் பிரதேசங்களில் தங்கியிருந்த மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். அதுமட்டுமல்லாது போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் அதிகளவில் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. ஆனால் இவற்றையெல்லாம் இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்ந்து மறுத்துவருகின்றனர். இறுதிப்போரின்போது ஒருவர்கூடப் பாதிக்கப்படவில்லையென மகிந்த ராஜபக்ச கூறிவருகிறார்.

### இராணுவத்தை பாதுகாக்கும் முனைப்பில் கோத்தபாய

மகிந்த தரப்பின் அரச தலைவர் தேர்தல் வேட்பாளரென அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச போரில் ஈடுபட்ட படையினரைத் தாம் பாதுகாக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். படையினரை உற்சாகப்படுத்தி அவர்களதும் குடும்பத்தினரதும் வாக்குகளை அரச தலைவர் தேர்தலில் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே அவர் இவ்வாறு கூறியிருப்பாரென ஊகிக்க முடிகின்றது. நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற அநீதியை நியாயப்படுத்தியவர்தான் இந்தக் கோத்தபாய என்பது குறிப்பிடத்தக்கது.

> இந்த நாட்டில் சிங்கள - பௌத்தர்களே அதிகளவில் வாழ்கின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால் பெரும்பான்மையினர் என்ற பலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சிறுபான்மையினரை அடிமைகள் போன்று நடத்த முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டின் பௌத்த பீடங்கள் இன வேற்றுமை பார்க்காது சகல இன மக்களையும் அரவணைத்துச் செல்கின்ற நிலை இன்னமும் உருவாகவில்லை. நீராவியடியில் பிக்குகள் அடாத்தாக நடந்துகொண்டதை பௌத்த பீடங்கள் கண்டுகொள்ளவில்லை. கண்டிக்கவுமில்லை. இதற்கு மாறாக தமிழர்களை எச்சரிக்கும் பாணியில் மல்வத்து பீடத்தின் துணைநாயக்கர் கருத்து வெளியிட்டுள்ளமை கவலை தருகின்றது. நீராவியடியில் ஆரம்பம் முதல் நடந்த விடயங்களை அவர் ஆராய்ந்து பார்த்திருந்தால் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கமாட்டார். இந்த நாட்டில் சிங்கள - பௌத்தர்களே அதிகளவில் வாழ்கின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால் பெரும்பான்மையினர் என்ற பலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சிறுபான்மையினரை அடிமைகள் போன்று நடத்த முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு நடந்துகொண்ட பலநாடுகள் உலக அரங்கிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதை நாம் கண்டுள்ளோம்.

### பல துறைகளிலும் பின்னடைவு நிலை

இலங்கை சகல துறைகளிலும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றது. பொருளாதாரம் அடிமட்டத்துக்குச் சென்றுவிட்டது. உற்பத்திகள் குறைவடைந்து விட்டன. இதனால் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்து தேசிய வருமானம் பெருவீழ்ச்சி கண்டுள்ளது. இறக்குமதிப் பொருளாதாரமே நாட்டின் நிலையென்றாகிவிட்டது. பிற நாடுகளிலிருந்து பெற்ற கடன் களைக்கொண்டு நாட்டின் செலவினங்களை ஈடுசெய்ய வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சீர்செய்ய வேண்டிய விடயங்கள் ஏராளமாகவுள்ளன. தற்போதைய ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்குக் காரணமாக யாவுமே தவறாகத் தெரிகின்றன. இனிமேல் தெரிவுசெய்யப்படப் போகும் புதிய அரச தலைவரும் புதிய அரசும் ஏற்படுத்தப்போகும் மாற்றத்துக்காக மக்கள் காத்திருக்கிறார்கள்.

## ஆசிரியருக்கான கடிதம்

# வாழைத்தோட்ட பழுதனை வீதியை சீரமைத்து உதவுவார்களா?

கொடிகாமம் - பருத்தித்துறை முதன்மை வீதிக்கு கிழக்குப் பக்கமாக உள்ள வாழைத்தோட்ட பழுதனை வீதி பல ஆண்டுகளாக சீரமைப்பில்லாது, அதிகாரிகளால் மறந்த ஒரு வீதியாகக் காணப்படுகின்றது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இந்த வீதியானது இடைக்குறிச்சி, மாவில், மாசேரி, மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் வீதியாகவும், கும்பிட்டான்புல கற்பக விநாயகர் வீதிக்குச் செல்லும் வீதியாகவும் அமைகிறது. அத்துடன் கறுக்காய், தம்பான் பகுதி மக்கள் ஜே/340 கிராம அலுவலர் பிரிவுக்கு செல்லப் பயன்படுத்தும் வீதியாகவும் விளங்குகின்றது. இவ்வாறு பல தரப்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த வீதி சீரமைப்பில்லாது விடப்படுத்தல் தகுமா?.

அறுவடை காலங்களில் விவசாயிகள் பல்வேறு இடர்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியிலேயே இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். எனவே உரிய முக்கியத்துவம் கருதி, இந்த வீதிக்கு இனிமேலாவது புத்துயிர் கொடுத்து புதுப்பொலிவுடன் பயணிகள் பயணம் செய்ய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமெனக் கேட்கின்றோம்.

*அன்பு,வரணி*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாமென்றால் அது குறித்தும் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் எதிர்காலத்தை மது அரக்கன் அழிக்கின்றான்

## தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

பல வர்ணங்களில் வலம்வரும் மதுபான அரக்கன் எமது இளைஞர்களின் எதிர்காலத்தை அளிக்கின்றான் என்று தெரிவித்தார் வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன்.

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பன்னாட்டு கூட்டுறவுதினவிழா அண்மையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பல சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றன. அதிகாரிகள் மட்டத்தில் எது வித நடவடிக்கையும் எடுக்காதமையே அதற்குக் காரணம். பனையிலிருந்து பெறப்படும் கள்ளை அருந்துவோர் எவரும் இறந்துள்ளனர் என்று வரலாறில்லை. ஆனால் இன்று பல வர்ணங்களில் வலம்வரும் மது அரக்கன் எமது இளைஞர்களையும் அவர்களின் எதிர்காலத்தையும் சீரழிக்கின்றான் - என்றார். (த-63)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

பன்னாட்டு முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளன.

இன்றுசெவ்வாய்க்கிழமை கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சங்கத் தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பதிகாரி இரட்ணசிங்கம் அமலன்கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் எம். ஆர்.ஜெயதரன், சமுர்த்தி அலுவலர் என்.உமாகாந்தன், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் வி.மாதவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் முதியோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஐ)


* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

பன்னாட்டு சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம்,சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் யோ.இருதயராஜா,வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ஐ)



## துப்பாக்கி ரவைகள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக். 1


யாழ்ப்பாணம், ஆழியவளை பகுதியிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கடற்படையினர்மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 41ரவைகள் மீட்கப்பட்டன.

ரி-56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற ரவைகளே இதன்போது மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### பாடசாலை நிகழ்வுகள்

## திறன் வகுப்பறை திறப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.1

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன்வகுப்பறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 'ரட்ணம் பவுண்டேசன்' நிறுவன அனுசரணையுடன், லண்டனில் வாழும் பழைய மாணவரான .ந.சிறீஸ்கந்தராசா குடும்பம் அன்பளிப்புச் செய்த கற்றல், கற்பித்தல் உபகரணங்களைக் கொண்டு திறன் வகுப்பறை அமைக்கப்பட்டது. சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ் வேலாயுதம் வகுப்பறையைத் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர் சு.சிவமலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் மற்றும் பாடசாலை சமூகத்தினர் கலந்து கொண்டனர். (க)

## திறப்பு நிகழ்வும் மதிப்பளிப்பும்

கொடிகாமம்,ஒக்.1

யாழ்ப்பாணம் போக்கட்டி அ. த.க. பாடசாலையில் சரஸ்வதிசிலை மற்றும்திறன் வகுப்பறை ஆகியவற்றின் திறப்பு நிகழ்வும் மேலதிக மாவட்டச் செயலருக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை வளாகத்தில் காலை 9.30 மணியளவில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராஜா, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



## ஆசிரியர் தின நிகழ்வு

கொடிகாமம்,ஒக்.1

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வுஎதிர்வரும்10ஆம் திகதி கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் பிற்பகல் 1.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விபணிப்பாளர்த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)




## சந்தைக் கட்டடம் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்ப்பாணம், மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் பொதுச் சந்தைக் கட்டடம் கடந்த வாரம் முதல் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் சந்தை சீரமைக்கப்பட்டுள்ளது.

சந்தை சீரின்மையால் பொதுமக்கள் நீண்ட தூரங்களுக்குச் சென்று அன்றாட தேவைக்குரிய பொருள்கள், மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலமை ஏற்பட்டது. தற்போது சந்தை சீரமைக்கப்பட்டதால் வியாபாரிகளும், மக்களும் நன்மையடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-63)



நவராத்திரி தினத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கோலப் போட்டி நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. (க-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

*யாழ்ப்பாணம், ஒக். 1*

**யா**ழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பல்கலைக் கழக வாசலில் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஊழியர்களுக்குரிய சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அதிகரி அதிகரி சம்பளத்தை அதிகரி, சீர் செய் சீர் செய் சம்பளப் பிரச்சினையை சீர் செய், வேண்டும் வேண்டும் காப்புறுதி வேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை-அம்பாறை மாவட்டம் தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் 21ஆவது நாளாக நேற்றுப் பாராட்டத்தில் ஈடுபட்டனர். தென்கிழக்குப் பல்கலைக்கழக நுழைவாயிலிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள வீதி வரை பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சிறிதுநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் போராட்டம் கடந்த 10 ஆம் திகதி முதல் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாடு முழுவதுமுள்ள 27 பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். (து-7)

## பல்வேறு விபத்துக்களில் 4 பேர் காயம்

சாவகச்சேரி,ஒக்.1

வெவ்வேறு விபத்துக்களில் காயமடைந்த நான்கு பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன

மீசாலைப் பகுதியில் முற்பகல்வேளை உந்துருளி ஒன்று ஒழுங்கை வளைவில் திரும்ப முற்பட்டபோது கல் சறுக்கி வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணராஜா அனிஸ்ரன் (வயது-17), ஞானேந்திரன் மேனன் (வயது-19) ஆகியோரும் காயமடைந்தனர்.

கொடிகாமம் கச்சாய் வீதி உள்ஒழுங்கையில் மாலைவேளை உந்துருளியில் பயணித்த வேளை சில் கல்லில் சறுக்கி விபத்துக்குள்ளானது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சதாசீவரத்தினம் தவசீலன் (வயது-22) என்பவர் காயமடைந்தார்.

இதேவேளை-குறித்த பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த சித்தங்கேணி சிவன் கோவிலடியைச். சேர்ந்த லக்ஷ்மி நாராயணக் குருக்கள் சிந்துஜன் (வயது-19) என்பவரும் காயமடைந்தார். காயமடைந்தநான்கு பேரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## 'சிவதீபம் – 2' நூல் வெளியீடு

கரணவாய்,ஒக்.1

யாழ்ப்பாணம், வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் 'சிவதீபம் 2' நூல் வெளியீட்டுநிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை தையல்பாகர் அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய முன்னாள் அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை மா.செல்வதாஸ், நயப்புரையை ஆசிரியர் க.அஜந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-108)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,ஒக.1

யாழ்ப்பாணமாநகரசபைஎல்லைக்குட்பட்ட நாவாந்துறை பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதன்படி இன்று பழம் வீதி ஆறுகால்மடத்தில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. குறித்த தடுப்பூசிகளுக்கானஉரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்றுசுகாதாரமருத்துவஅதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)

## வீதியில் வெட்டப்பட்ட குழிகளால் பயணிப்போருக்குப் பெரும் சிரமம்

வவுனியா, ஒக். 1



வவுனியா, குருமன் காட்டுப்பகுதியிலிருந்து திருநாவற்குளம் செல்லும் காப்பெற் வீதியின் குறுக்கே குழிகள் வெட்டப்பட்டுள்ளன. எனினும் அவை நிரவப்படவில்லை. இதனால் அந்த வீதியால் பயணிப்போர் விபத்துக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களின் ஈருருளிகளும், ஏனைய வாகனங்களும் வீதியால் பயணிக்கும் போது பழுதடையும் சம்பவங்களும் நடந்துள்ளன. சீரமைக்கப்பட்ட காப்பெற் வீதியின் குறுக்காக மக்கள் தமது தேவைகளுக்காக குழிகளை வெட்டியுள்ளனர். தேவைகள் முடிந்த பின்னர் குழிகள் நிரவப்படுவதில்லை. இது தொடர்பில் உரிய அதிகாரிகளும் கவனத்தில் எடுக்கவில்லை. இதனால் வீதிகளில் பயணிப்போர், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், வாகனச்சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க)

## சிறுவர் மாதிரிச் சந்தை

யாழ்ப்பாணம்,ஒக்.1

துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் சிறுவர் மாதிரிச் சந்தை நேற்று நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் லிங்கனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விபணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொண்டு சந்தையை ஆரம்பித்து வைத்தார். (க-422)



இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ், இளவாலை மெய்கண்டான் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரா பாடசாலைகளைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு காலணிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (க)

## பழைய மாணவர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்ப்பாணம், வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர் ஒன்றுகூடல் பாடசாலை ஆ.சி. நடராஜா மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக கணக்காளரும் கொழும்பு ஜோலங்க முன்னாள் பணிப்பாளருமான செல்வி இ.ரஞ்சினி, விவசாய திணைக்கள பிரதி பணிப்பாளர் ச.சதீஷ்கரன், மூத்த விரிவுரையாளர் வ.பாலமுருகன், முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, மருத்துவர் க.கார்த்திகேயன் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் பழைய மாணவர்கள்.முன்னாள் ஆசிரியர்கள் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பவளவிழா தொடர்பாக கருத்தாடல் இடம்பெற்றது. (ஐ)

## உள்ளூராட்சித் திணைக்கள முன்பள்ளிகளில்
# தற்காலிகமாக பணியாற்றியோர் நிரந்தர நியமனத்தை இழந்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்களின் கீழ் உள்ள முன்பள்ளிகளில் பல ஆண்டுகளாக தற்காலிகமாகப் பணியாற்றியவர்களைகைவிட்டு தற்போது புதியவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பலர் 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகளாக தற்காலிகமாக பணியாற்றுகின்றனர். சிலர் 15 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். இந்தநிலையில் தற்போது அந்த இடங்களுக்குத் தேவையான ஆசிரியர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்களின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆளணி அங்கீகாரமாக 51பேரே நியமிக்கப்படமுடியும். ஏற்கனவே 11 பேர் நிரந்தர ஆசிரியர்களாகப் பணியிலுள்ளனர். எஞ்சிய 41 வெற்றிடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். குறித்த 41 வெற்றிடங்களில், தற்காலிகமாகப் பணியாற்றிவந்த எவரும் உள்வாங்கப்படவில்லை.

அதனால் தாம் நிர்க்கதியாகியுள்ளோம். 20 அல்லது 25 வயதில் இணைந்த நாங்கள் தற்போது 40 வயதை எட்டிய நிலையில் எந்த முன்னேற்றமும் இன்றி பணி இழக்கும் நிலையை எதிர்கொண்டுள்ளோம். இவ்வாறு தற்போது16 ஆசிரியர்கள் உள்ளோம். இதற்கு ஏதாவது மாற்று வழி செய்யவேண்டும் என்று அவர்கள்கோரிக்கைவிடுக்கின்றனர்.

இது தொடர்பில் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது, உள்ளூராட்சி சபைகளில் நிலவிய குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முதலில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பணியிலிருந்த ஆசிரியர்கள் சிலர் தொடர்பு கொண்டு தமக்கு 35 வயது தாண்டியுள்ளது. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை இழக்கின்றோம் என்று சுட்டிக்காட்டினார். மீள விளம்பரம் கோரும்போது வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டது. இதன்போது குறித்த 16 பேரில் 11 பேர் விண்ணப்பித்தனர்.

இருப்பினும் எழுத்துப் பரிட்சையிலேயே பலர் சித்தியடையவில்லை.

எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில் சிலர் செயல்முறை பரீட்சைக்கு உட்படுத்திய போது க.பொ.த. உயர்தரத்துடன் டிப்ளோமா தாரிகள் அதிகம் தேர்வாகியுள்ளனர் எனப் பதிலளித்தனர். (து-105)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் முதற்றடவையாக இஞ்சிச் செய்கை அதிகரிப்பு

## 500 விவசாயிகளுக்கு இஞ்சி பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1


யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்றடவையாக இஞ்சிச் செய்கையை அதிகரிப்பதற்கு, அதிக விவசாயிகள் உள்வாங்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களை விட இம்முறை அதிக உற்பத்தியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சுமார் ஆயிரத்துநூறு கிலோகிராம் இஞ்சி 500 விவசாயிகளுக்கு இம்முறை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுஎன்றுமாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது. யாழ்பாண மாவட்டத்தில் கடந்த காலத்தில் விவசாயிகள் இஞ்சி செய்கையில் ஈடுபட்டனர். அதுவெற்றியளித்துள்ளதால், விவசாயிகள் அதிக இலாபத்தையும் பெற்றுள்ளனர். இதனால் இஞ்சி செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் பலர் ஆர்வமாக உள்ளனர் என்றதகவல் பெறப்பட்டது.

அதன்அடிப்படையில்இஞ்சிச்செய்கையை ஊக்குவிப்பதற்கு அரச தலைவர் செயலகம் முன்வந்துள்ளது. செயலகத்தின்ஊக்குவிப்புடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்றடவையாக அதிக எண்ணிக்கையில் இஞ்சி பயிரிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. விவசாயிகளைஊக்குவிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இஞ்சியைப் பயிரிட்டு விளைச்சலைப் பெறும் விவசாயிகள் அதிக இலாபத்தைப் பெறக்கூடியதாக இருக்கும்.

மேலும் ஆர்வமுடைய விவசாயிகளையும்செய்கைக்குள்உள்ளீர்ப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)



## மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இணையத்தொழில்நுட்பமாநாடு

வவுனியா, ஒக். 1

மைக்ரோசொப்ட்நிறுவனத்தின் இணையத்தொழிநுட்ப மாநாடு வவுனியா வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள தனியார் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நேற்று நடைபெற்றது.

மாநாட்டில்இணையத்தின்பயன்பாடும், அதில்மைக்ரோ சொப்ட்நிறுவனத்தின்பங்கும், இணையத்தில்எவ்வாறு கோப்புகள், மென்பொருள்களை இலகுவாக சேமித்து செயற்படுத்துவது, இணையம்மூலம்எவ்வாறு இலாபம் ஈட்டுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக வளவாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இலங்கைக்காக பிரதிநிதிகளான ம. விக்னராஜ், க. ஹட்சனா மற்றும் அசிஸ்ரியா, நிறுவனத்தின் பணிப்பாளர் ப. லதீப் ஆகியோர் மாநாட்டில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தொழில்நுட்ப ஆர்வலர்கள், மென்பொருள் வடிவமைப்பாளர்கள், தொழில்நுட்பகல்லூரிமாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க-ரி4)

## நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக்.1

தொல்புரம், விக்னேஸ்வர வித்தியாலயத்தின் நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு நிகழ்வும் வித்தியாலய முதன்மை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ. சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சிறப்பு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவர் பு. முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பா. மகாலிங்கசிவம் கலந்து கொள்வார். (க)

## கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி மதகுடன் மோதி கோர விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, ஒக்.1

வேகக் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி அருகில் இருந்தமதகுடன்மோதிவிபத்துக்குள்ளானது. அதைச் செலுத்திச் சென்ற இளைஞன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வவுனியா, ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பாலமோட்டைப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன், நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பல்சர் ரக உந்துருளியில் இறம்பைகுளம் சந்தியிலிருந்து தனது வீடு நோக்கிப் பயணித்துள்ளார்.

மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் உந்துருளி சென்றுகொண்டிருந்தபோதுஅதிகவேகம்காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மதகுடன் மோதியது.

இதனால் தூக்கி வீசப்பட்ட இளைஞன் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவு வண்டி மூலம், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும்அவர்ஏற்கனவேஉயிரிழந்துவிட்டதாகமருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் பாலமோட்டைப் பகுதியைச் சேர்ந்த சசிகுமார் பிரிந்தன் (வயது - 20) என்றே இளைஞனே சாவடைந்துள்ளார். விபத்து தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-110)

## ஓவியக் கண்காட்சி இன்றும் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக்.1

ஓவியர் எம்.எஸ். சிவதாசனின் "தாயும் சேயும்" ஓவியக் கண்காட்சி மேலும் ஒரு நாள் நீடிக்கப்பட்டுஇன்றுமாலை5 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் கலைத்தூது கலாமுற்றம் ஓவியக்கூடத்தில் நேற்றுமுன்தினம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று வரை நடைபெற்றது. பொதுமக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த ஓவியக் கண்காட்சி இன்று வரை நீடிக்கப்பட் டுள்ளது.

கருவிமாற்றுத்திறனாளிகளின்சமூகவளநிலைய அபிவிருத்தி நிதிக்காக கருவி நிறுவனத்தால் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகிறது. (ஐ)

## அறநெறிப் பாடசாலை புதிய கட்டடம் திறப்பு




முல்லைத்தீவு, ஒக். 1

முல்லைத்தீவு, நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய 'கற்பகா' அறநெறிப்பாடசாலையின்புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னித் தேர்தல்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்திருமதி சாந்திசிறீஸ்கந்தராசாவும் சிறப்புவிருந்தினர்களாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக இந்து கலாசார திணைக்கள அலுவலர் மோகன், ஒட்டுசுட்டான் பிரதேசசபைஉறுப்பினர் சீலன், பழம்பாசி கிராம அலுவலர் இ. பகீதரன், யாழ்ப்பாணம்காரைநகர் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்கசபை அமைப்பாளர் சைவமணி, முல்லைத்தீவு தண்டுவான்அ.த.க. பாடசாலை அதிபர் கு. பஞ்சலிங்கம், பழம்பாசிகிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் ந. நிசாந்தன், பழம்பாசி கமக்கார அமைப்பின் தலைவர், பழம்பாசி மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி கிருத்திகா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-222)

## சஜித்பிரேமதாஸவுக்கு ஆதரவாக முல்லையில்சுவரொட்டிகள்




முல்லைத்தீவு, ஒக்.1

"புதிய இலங்கைக்குசஜித்" என்றுஎழுதப்பட்டசுவரொட்டிகள் முல்லைத்தீவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸபரிந்துரைசெய்யப் பட்டுள்ளார்.

பரிந்துரை செய்யப்பட்ட சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தச் சுவரொட்டிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் முல்லைத்தீவு நகர்ப்பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநிலங்களுக்கான அதிகாரம் போன்று இலங்கை அரசிடம் பெற்றுத் தாருங்கள்

## இந்திய அரசை வலியுறுத்துகிறார் சார்ள்ஸ் எம்.பி.

*மன்னார், ஒக். 1*

**பா**கிஸ்தான் நாட்டிடமிருந்து பங்களாதேஷ் நாட்டைத்தனிநாடாகப் பிரித்துக்கொடுத்தது இந்திய அரசே. இந்தியாவில் மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப்போன்றாவது, இந்திய அரசு இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுத்தரவேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாது:

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலின் போது எவருக்கு ஆதரவு தெரிவித்தாலும் அரசியல் தீர்வை எந்த அரசதலைவரும் எமக்குத் தரப்போவதில்லை.

நீதிமன்றின் கட்டளைக்கு சம்பந்தப்பட்ட பௌத்த மதகுருக்கள் கட்டுப்படவில்லை. நீதிமன்றின் கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நீதிமன்றக் கட்டளை வருவதற்கு முன்பாக வடபிராந்திய மூத்த பிரதிப்பொலிஸ் மா அதிபருடன் கதைத்தேன். எனினும் பொலிஸார் பிக்குகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளனர்.

பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக பொலிஸ் திணைக்களம் அல்லது வேறெந்தத் திணைக்களமும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்கின்ற சூழ்நிலை வெளிப்படையாகத் தெரிகின்றது. தமிழ் மக்கள் அல்லது தமிழ் பேசும் மக்கள் சிங்கள பேரினவாதிகளின் கொள்கைக்கு இணங்கிப்போனால் மாத்திரமே இலங்கையில் இருக்க முடியும் என்கின்ற கருத்தை இந்தச்செயற்பாட்டின் மூலம் வெளிப்படையாகச்சொல்கின்றார்கள்.

பௌத்த சிந்தனையை மீறி தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு எந்த அரசும் தயாரில்லை. சட்டம் ஒழுங்கின் அமைச்சராக இந்த நாட்டின் அரசதலைவரே இருக்கின்றார். இலங்கையை ஆள்கின்ற அரசதலைவரின் கீழ் எமது மக்களுக்குத் தீர்வு வராது என்பதைக் காட்டுவதற்கு, அரசியலில் இல்லாத தமிழரை அரசதலைவர் வேட்பாளராக நிறுத்தி, தமிழ் மக்கள் வாக்களித்து ஒரு செய்தியைக் கொடுக்க வேண்டும்.

அரசமைப்பு மாற்றத்துக்கு 3 இல் 2 பெரும்பான்மையை நாடாளுமன்றில் தக்க வைக்க வேண்டிய சூழ்நிலை எங்களுக்கு மட்டுமே இருக்கின்றது. ஜே.வி.பிக்கு அல்லது ஐக்கிய தேசியக்கட்சிக்கு நாடாளுமன்றில் 3 இல் 2 பெரும்பான்மை தேவையில்லை. அரசமைப்பு மாற்றம் ஒன்று தேவையாக இருந்தால் 3 இல் 2 பெரும்பான்மை தேவை.

2015இல் மகிந்த ராஜபக்ச வேண்டாம் என்று மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். அதற்கு நாம் பங்களிப்புச் செய்தோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாங்கள் எந்தக் காலத்திலும் ஆதரவு தெரிவிக்கவில்லை. - என்றார். (த56)



## சீரமைக்கப்பட்ட மலசலகூடம் கையளிப்பு

வவுனியா,ஒக்.1

வவுனியா, தம்பனைச் சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் மலசலக் கூடம் சீரமைக்கப்பட்டு மாணவர்கள் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. 'சிறகுகள்' அமைப்பின் வவுனியா, மன்னார் நிர்வாகப்பிரிவின் ஏற்பாட்டில் குறித்த சீரமைப்புப் பணிகள் இடம்பெற்றன. (ஜ-222)

## ஆன்மிகப் பயணம்

கிளிநொச்சி,ஒக்.1

கிளிநொச்சி, கண்டாவளை புன்னைநீராவி கிராமத்தைச் சேர்ந்த மூத்தோர்கள் 50 பேர் ஆன்மிகப் பயணமாக மன்னார் மாவட்ட திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். நாளைமறுதினம் வியாழக்கிழமை இவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரம், பள்ளிமுனை சென் லூசியா தேவாலயம், மடு ஆகியதிருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். "மூத்தோர் உள சமூக மேம்பாடு" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினர் பயணத்தை ஏற்பாடு செய்துள்ளனர். (ஜ-222)



## 'இது விதியா?' என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

தலைமன்னார், ஒக்.1

நுண்கடன் திட்டத்தால் கடன் பெறும் மன்னார் மாவட்ட விவசாயிகள் மற்றும் ஏனைய குடும்பத்தார் நாளாந்தம் அவதியுறும் சம்பவங்கள் 'இது விதியா?' என்ற தலைப்பில் விவசாயிகளுக்குக் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

ச.லெபோன்ராஜ் தலைமையிலான குழுவினர் கலை நிகழ்வாக இதைக் காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாய அமைப்புக்களின் தலைவர்கள், கமநல விவசாய அதிகாரிகள், பெண்கள் குழுப் பிரதிநிதிகள், விவசாயத் திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.


பலர் வாழ்வாதார தொழிலுக்காக நுண் கடன்களைப் பெற்று அந்தப் பணத்தை தங்கள் ஆடம்பரச் செலவுக்குச் செலவழித்துவிடுகின்றனர். பின்னர் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாது கடன் வழங்கியவர்களின் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர்.

இறுதியில் கடன்பெற்ற பெண்கள் உயிர்மாய்த்துவரும் செயற்பாட்டை விழிப்புணர்வு ஊடாக வலியுறுத்துகின்றனர்.

இந்த நிகழ்வு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) அனுசரணையுடன் மன்னார் மாவட்ட [illegible] விவசாய பெண்கள் குழுவின் ஒழுங்கமைப்பில் இது நடைபெறுகின்றது. (த-60)

# கடும் பனிமூட்டத்தால் அவதியுறும் சாரதிகள்

வவுனியா,ஒக்.1



வவுனியாவில் அதிகாலை வேளை கடும் பனிமூட்டமான காலநிலை நிலவுவதால், வாகனச் சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த சில நாள்களாக வவுனியாவில் மழை பெய்து வந்த நிலையில், தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக ஏ-9 வீதி பனிமூட்டமாகக் காட்சியளிக்கிறது.

இதனால் அதிகாலையில் தமது கடமைகளுக்குச் செல்லும் வாகனச் சாரதிகள், அரச ஊழியர்கள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகள், தனியார் துறையினர் எனப் பல்வேறு தரப்பினர் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

## கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை அறுவைசிகிச்சை

வவுனியா,ஒக்.1

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துச் செல்லும் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர், வவுனியா நகரசபையினருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக வவுனியா நகரப்பகுதியில் நடமாடிய கட்டாக்காலி நாய்களை வாகனத்தில் [illegible] வவுனியா நகர சபையின் [illegible] கொண்டு வந்து, கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் சிவராமலிங்கம் கிரிதரனின் மேற்பார்வையின் கீழ் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இருபதுக்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்களுக்குக் கருத்தடை அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சுமார் 400 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (க-ரி4,110)

## பனை அபிவிருத்தி சபையின் அலுவலக திறப்பு விழா

முல்லைத்தீவு,ஒக்.1

பனை அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு ஏ-9 வீதி மாங்குளத்தில் இடம்பெறும்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஏ.என். இராசேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுற்றுலா அதிகார சபைத் தலைவர் கே.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பிரேமகாந்தன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரி.அகிலன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரை நியமிக்கக் கோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஒக்.1

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாரதி வித்தியாலயத்துக்கு அதிபரை நியமிக்குமாறு கோரி, பெற்றோர்கள் பாடசாலையை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிமொழியின் பின்னர் பெற்றோர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பாரதி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர் கடந்த ஜனவரி மாதத்துடன் மாற்றலாகிச் சென்ற நிலையில் குறித்த பாடசாலைக்கு இன்று வரை அதிபர் நியமிக்கப்படவில்லை. அத்துடன் பிரதி அதிபரும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. இதனைக் கண்டித்தே பெற்றோர்கள் பாடசாலை நுழைவாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆசிரியர்கள், மாணவர்களை உள்நுழைய அவர்கள் அனுமதிக்கவில்லை. போராட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர் தெரிவித்ததாவது:

"900க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை ஒன்றுக்கு கடந்த 9 மாதங்களாக அதிபர் இல்லை. ஒரு பிரதி அதிபர் கூடக் கிடையாது. இந்த நிலையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் எவ்வாறு சீரமைக்கப்படும். தாயும் தந்தையும் இல்லாதுபிள்ளைகள்வாழும் நிலையில் உள்ள ஒரு குடும்பம்போன்றேஎமது பாடசாலை இயங்குகின்றது. இது தொடர்பில் கல்வித் திணைக்களம் உரியகவனம்செலுத்தவில்லை. இதனால் நீண்ட காலமாகப் பொறுமை காத்து மாணவர்களின் எதிர்காலத்தை உறுதி செய்ய இதனைத் தவிர வேறு மார்க்கம் தெரியாத காரணத்தால், குறித்த போராட்டத்தில் ஈடுபட்டோம்" என்றனர்.

பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் குறித்த விடயத்தில் தலையிட்ட வலயக் கல்விப் பணிப்பாளர், எதிர்வரும் 15 நாள்களில் ஓர் அதிபரை நியமிப்பதாக உறுதியளித்தார். ஒரு நிரந்தர அதிபரை நியமிக்கும் வரையில் கோட்டக் கல்வி அதிபர் பதில் கடமையாற்றுவார் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்துப் பெற்றோர் போராட்டத்தைக் கைவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராட்டம் இடம்பெற்றதையடுத்து, கல்வி அமைச்சின் அதிகாரிகள் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சென்று உரிய விடயம் தொடர்பில் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-105,70,ரி3,222)



## நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல்

மன்னார், ஒக்.1

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரம்பைக்குளம் சிறி முத்து மாரியம்மன் ஆலய நிரந்தர கட்டடத்துக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது.

கிட்டத்தட்ட 100 வருடங்கள் பழமையான இந்த ஆலயம் அமைப்பதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஊடாக முதற் கட்டமாக 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிக்கல் நடும் நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் செல்லத்தம்பு மற்றும் சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர். (சு-213)

## லஞ்ச ஊழல் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல்

முல்லைத்தீவு, ஒக்.1

இலஞ்ச ஊழல் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகள் முல்லைத்தீவு நகரப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இலஞ்சம் இடம்பெறுவதை மக்கள் தெரியப்படுத்தும் விதம் தொடர்பாக, முல்லைத் தீவு, தண்ணீரூற்று மக்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டது. அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு, இலஞ்சம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் வீதிகளில் சென்றவர்களுக்குதுண்டு அறிக்கைகளை விநியோகித்து விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். கபே அமைப்பின் ஏற்பாட்டில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (சு-ரி3)



## வீடுகள் 8 கையளிப்பு

மன்னார், ஒக்.1

பன்னாட்டு வதிவிட தினத்தை முன்னிட்டு மன்னாரில் எட்டு வீடுகள் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்

இன்றிலிருந்து எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பன்னாட்டு வதிவிட வாரமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் மன்னாரில் தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, பள்ளிமுனை, எமில்நகர் போன்ற இடங்களில் அமைக் கப்பட்ட வீடுகளே கையளிக்கப்படவுள்ளன.

இந்த வாரத்தில் இலங்கை முழுவதும் 101 வீடுகள் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-213)

## போக்குவரத்து விதிமுறைகளை மீறினரென 28 சாரதிகள் சிக்கினர்



வவுனியா, ஒக். 1

வவுனியாவில் போக்குவரத்து விதிமுறைகளை மீறினரென்று 28 சாரதிகளை அடையாளப்படுத்திய பொலிஸார், சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்.

அவர்களில் 25 பேருக்கு சம்பவ இட தண்டம் அறவிடும் பத்திரம் வழங்கப்பட்டதோடு மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா போக்குவரத்து பொலிஸார் நேற்றுக்காலை தொடக்கம் சுமார் 2 மணித்தியாலங்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே 28 சாரதிகளும் மாட்டினர். வவுனியா நீதி மன்றுக்கு முன்பாக இந்தத் திடீர் சோதனை நடத்தப்பட்டது. தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, அதிகளவாக ஒலியை முப்பியமை, முச்சக்கரவண்டிக்கு அதிகளவான அலங்காரம், தலைக்கவசத்தினுள் தொலைபேசி வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களைப் பொலிஸார் சாரதிகளுக்கு எதிராக முன்வைத்துள்ளனர். (த-ரி4)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஒக்.01

வவுனியாவில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரசபை, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர்.

வவுனியா நகரசபை வளாகத்தில் இருந்து ஆரம்பமான துப்புரவு நடவடிக்கைகள், பொது மருத்துவமனை, பேருந்துநிலையம், முதன்மை வீதிகள் உள்ளிட்ட இடங்களில் முன்னெடுக்கப்பட்டன. (சு-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவை ஆதரிக்க சு.க. முடிவெடுத்தால் எதிர்பாராத மாற்றுத் தீர்மானம் எடுப்பேன்!

## குமார வெல்கம எச்சரிக்கை சஜித் களமிறங்கியமைக்கு வரவேற்பு

கொழும்பு, ஒக். 1

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாகத் தீர்மானித்தால் அரசியல் ரீதியில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வேன். அது எவரும் எதிர்பார்க்காததாக அமையும். இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் வெல்கம மேலும் தெரிவித்ததாவது: ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெறுவது, தோல்வியடைவதை நாட்டு மக்களே இறுதியில் தீர்மானிப்பார்கள். ஜனநாயகத்தை மதிக்கும் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்பதை கட்சியே தீர்மானிக்க வேண்டும். அரசியல் தேவைகளுக்காகவும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல் அரசியல் தீர்மானங்களை ஒருபோதும் நான் முன்னெடுக்கவில்லை. இனியும் அவ்வாறே - என்றார். (ம)



### இருதயநோய் தினத்தை முன்னிட்டதாக கல்முனையில் விழிப்புணர்வு ஊர்வலம்

மட்டக்களப்பு, ஒக். 1

உலக இருதய நோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலமொன்று கல்முனையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மற்றும் தொற்றா நோய்பிரிவு என்பன இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.எல்.அலாவுதீன் தலைமையில் பேரணி நடைபெற்றது. சுகாதாரப் பணிமனையின் மருத்துவர்கள், பணியாளர்கள் எனப் பலரும் பேரணியில் கலந்துகொண்டனர். (ம)

# தற்போதைய அரசால் இறைமைக்கு பாதிப்பு

## கோத்தபாய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 1



இந்தியப் பெருங்கடலில் சக்திவாய்ந்த நாடுகளுக்கிடையிலான மோதல்களில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஈடுபாட்டினால் இலங்கையின் இறைமை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லங்கா சமசமாசக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்கால அரசு நாட்டின் இறைமையை மீளமைக்க வேண்டும். இலங்கையைப்போன்ற சிறிய நாடு, சக்தி வாய்ந்த நாடுகளின் மோதல்களுக்குள் தலையிடக் கூடாது. பல்வேறு சக்திகளின் தலையீட்டினால் அணிசேராக கொள்கை அழிக்கப்பட்டுள்ளது. முறையான பாதுகாப்புத் திட்டத்தினால்தான் தீவிரவாதத்தை தோற்கடித்தோம். தற்போதைய அரசிடம் முறையான பாதுகாப்புத் திட்டமோ, பொருளாதாரத் திட்டமோ கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கூட்டுறவு சங்கங்கள் மகிந்தவுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ்ப்பாண மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சாவை அவரது உத்தியோக பூர்வ அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தனர்.

சந்திப்பில் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் அடங்கிய மனுவை மகிந்தவிடம் கையளித்தனர்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி தலைவர் செ.செல்வராசா தலைமையில் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் சந்திப்பில் பங்கேற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-63)

### கால்நடை மருத்துவ பணியகத்தில் செவ்வாயன்று மோட்டர் திருட்டு

சாவகச்சேரி, ஒக். 1

சாவகச்சேரி தனன்களப்பு வீதியில் கடந்த மாதம் இயங்கத் தொடங்கிய கால்நடை மருத்துவர் பணியகத்தில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீரிறைக்கும் மின்மோட்டர் கடந்த செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)



# பனை விதைகள் முல்லையில் நடுகை

முல்லைத்தீவு, ஒக். 1

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் பனம் விதைகள் நேற்று நடுகை செய்யப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி விபத்தில் உயிரிழந்த புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் ஏரம்பு இரத்தினவடிவேலின் நினைவாக இவை நடுகை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த பிரதேச சபை உறுப்பினர் 5ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டத்தை முன்னெடுத்து வந்தார்.

அவரின் நினைவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் விஜயகுமாரின் ஏற்பாட்டில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (து-ரி3)

# மலையக மக்களின் பேராதரவுடன் இமாலய சக்தியாக உள்ளது த.மு.கூ

## வேலுகுமார் எம்.பி சவால்

கொழும்பு, ஒக். 1

மலையகத் தமிழர்களின் அமோக ஆதரவைப்பெற்ற அரசியல் கூட்டணியாக தமிழ் முற்போக்கு கூட்டணி விஸ்வரூபமெடுத்துள்ளது. எனவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்காவிட்டால்கூட மக்கள் சஜித்துக்கே வாக்களித்து அவரை நிச்சயம் அரியணையேறவைப்பார்கள். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுக் காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

[illegible] சஜித் வந்துவிட்டார். வெற்றிநிச்சயம் என்ற மக்கள் ஆதரவு குரலே ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு சஜித்துக்கு ஆதரவாக உருவாகியுள்ள பேரலைகளை எவ்வாறு சமாளிப்பது என தெரியாமல் ராஜபக்சாக்களும் அவர்களின் சகாக்களும் திக்குமுக்காடி போய் உள்ளனர்.

அதுமட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய பலரும் சஜித்தின் கரங்களை மேலும் பலப்படுத்துவதற்காக மீண்டும் தாய்வீடு திரும்பிவருகின்றனர். இன்னும் சில நாள்களில் மகிந்தவின் முகாமிலிருந்தும் சஜித்துக்கு ஆதரவான படையணியொன்று வெளிக்கிளம்பவுள்ளது. எனவே, இனிவரும் நாள்களில் தரமான மற்றும் சிறப்பான அரசியல் சம்பவங்கள் அரங்கேறவுள்ளன.

மறுபுறத்தில் தோல்வி பீதியால் கதி[illegible] போயுள்ள மொட்டு கட்சிக்காரர்கள் வழமைபோல் இனவாத ஆயுதத்தை கையிலேந்தி சிங்கள, பௌத்த மக்களை திசைதிருப்பி வாக்குவேட்டை நடத்துவதற்கு தயாராகிவருகின்றனர். ஆனால், இம்முறை இந்த குறுக்குவழி அரசியல் யுக்தியும் வெற்றிபெறாது என்பதை மொட்டுக்கட்சிக்காரர்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

அதேவேளை, மலையகத்தில் பருவகால அரசியலுக்கு பேர்போன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரச தலைவர் தேர்தல் தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டை கடைபிடித்துவருவதை அக்கட்சி உறுப்பினர்களால் விடுக்கப்படும் அறிக்கைகள்மூலம் தெளிவாகின்றது. ஒக்ரோபர்அரசியல்சூழ்ச்சியின்போது மகிந்தவிடம் தஞ்சமடைந்து அமைச்சுப் பதவியை வாங்கிய ஆறுமுகன் தொண்டமான் தற்போது கோத்தாவுக்குத்தான் ஆதரவு என்பதை பகிரங்கமாக அறிவிப்பதற்கு ஏன் முடியாதுள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகாரக் குடும்பமாகிய ராஜபக்சாக்களிடம் ஆட்சியா?

## மக்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன

கொழும்பு, ஒக். 1

படுகொலைகள், ஊடக அடக்குமுறைகள், ஊழல் என்பன நிறைந்திருந்த ராஜபக்ச குடும்பத்தினரிடம் நாட்டை மீண்டும் ஒப்படைப்பதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன.



கொலன்னாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றும்போது குடியுரிமை மற்றும் குடியகல்வு திணைக்களத்தையும் ஆள்பதிவு திணைக்களத்தையும் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பாதுகாப்புச் செயலராகக் கடமை புரியவில்லை. பாதுகாப்பு அமைச்சராகவே கடமையாற்றினார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோத்தபாய ராஜபக்ச போலியான கடவுச் சீட்டையும் அடையாள அட்டையையும் பெற்றார்.

இராணுவத்தினருக்கு ஊடகவியலாளர்களைத் தாக்குவதற்கோ கொலை செய்வதற்கோ எவ்வித அவசியமும் இருக்கவில்லை. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தது கோத்தபாய ராஜபக்சவே. ஏன் என்றால் கோத்தபாய ராஜபக்சவின் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த அனைத்து இரகசியங்களையும் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க தன்வசம் வைத்திருந்தார். அதனை அவர் சாவடைவதற்கு முன்னர் பத்திரிகையில் வெளியிட அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். அதனை அடிப்படையாகக் கொண்டே கோத்தபாய ராஜபக்ச இந்தக் கொலையைச் செய்தார்.

அதேபோல வசீம் தாஜுதீன் கொலை செய்வதற்கு இராணுவத்தினருக்கு எவ்வித அவசியமும் இல்லை. ஏனென்றால் தாஜுதீன் இராணுவத்தினருடன் ரகர் விளையாடவில்லை. ராஜபக்ச குடும்பத்தினருடனேயே அவர் ரகர் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். தொடர்ந்து நான்கு வருடங்கள் சிறந்த ரகர் வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதன்போது பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு வசீம் கொல்லப்பட்டதும் இந்த ராஜபக்சகுடும்பத்தினராலேயே ஆகும். ஊடகங்களுக்குத் தீயிட்டார்கள், ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியிருந்தார்கள். இவையெல்லாவற்றுக்கும் காரணமாக இருந்த ராஜபக்ச குடும்பத்திடம் மீண்டும் நாட்டை ஒப்படைப்பதா..? எமது அரசிலும் குறைகள் இருக்கலாம். எமது அரசில் மாத்திரம் இல்லை. எந்த அரசிலும் இருக்கக்கூடும். அப்படி இல்லை என்றால் அது அரசே இல்லை. உதாரணத்துக்குப் பிரான்ஸ் நாட்டை எடுத்துக்கொள்வோம்" அங்கு அரச தலைவர் மக்ரோன் ஊழலை ஒழிப்பதற்காகவே ஆட்சியைக்கைப்பற்றினார். ஆனால் தற்பொழுது அவரை அடித்துத் துரத்தும் அளவுக்கு மக்கள் முன்வந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே ஊழலை ஒழிப்போம் என்று ஆட்சியைக் கைப்பற்றுவது சாத்தியமாகுமா?

கோத்தபாய ராஜபக்ச என்பவர் தனக்குத்தானே கூறிக்கொள்கின்றார் ராஜபக்ச குடும்பத்தில் உள்ள அப்பாவியான நபர் தானே என்று. அவருடைய அப்பாவித்தனத்தை கமல் குணரத்தின எழுதிய புத்தகத்தில் காணக்கூடியதாக இருந்தது.

1991ஆம் ஆண்டில் இராணுவத்தில் இருந்து விலகிப் பயந்து ஓடிய கோத்தபாய இன்று தாம் சிறந்த இராணுவ வீரர் எனக் கூறிக்கொள்கின்றார். நாட்டைக் காக்கும் போரின்போது உயிர் தப்பிக்கொள்வதற்காகவே அவர் இராணுவத்தில் இருந்து வெளியேறினார். அவ்வாறு தப்பியோடிய இவர் எப்படி சிறந்த இராணுவச் சிப்பாயாவார்? நினைத்தாலே சிரிப்பாக இருக்கின்றது - என்றார். (ம)



# கடற்படைகளிடையே மருத்துவ பயிற்சிகள்

கொழும்பு, ஒக். 1

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் மரைன் படைப்பிரிவு இலங்கை கடற்படை என்பன இணைந்து, இருதரப்பு மருத்துவ பரிமாற்ற பயிற்சிகளை மேற்கொண்டன.

இலங்கை கடற்படையின் விதுர தளத்தில் கடந்த ஒரு வார காலமாக இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்றது. கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தக் கூட்டுப் பயிற்சி, 27ஆம் திகதி முடிவடைந்தது. அமெரிக்காவின் மரைன் படையின் மருத்துவர் ஒருவர் உள்ளிட்ட எட்டு அதிகாரிகளைக் கொண்ட குழுவும், இலங்கைக் கடற்படையின் 40 மரைன் படையினரும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர்.

போரில் பல்வேறு சூழ்நிலைகளில், முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவ உதவிகள் தொடர்பாகவும், தமது அனுபவங்கள் மற்றும் ஆற்றல்கள் குறித்தும், அமெரிக்கக் குழுவினர் இலங்கை மரைன் படையினருக்கு விளக்கமளித்தனர்.

அதேவேளை இலங்கையில் உள்ள பாம்புகள் குறித்தும், விசமுள்ள, விசமில்லா பாம்புகளைக் கையாளுவது மற்றும் பாம்புக்கடிக்கான முதலுதவி குறித்தும், இலங்கைக் கடற்படையினர், அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளனர். (ம)

# கோத்தாவுக்கு தடைகோரி விரைவில் மனுத் தாக்கல்

## அமைச்சர் ராஜித தகவல்

கொழும்பு, ஒக். 1



நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடுவதற்குத் தடை விதிக்கக்கோரி விரைவில் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது - என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். கோத்தபாயவின் அமெரிக்கக் குடியுரிமைத்துறப்புவிவகாரத்தில் இன்னும் குழப்பம் நீடிக்கும் நிலையிலேயே மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இது தொடர்பில் ராஜித மேலும் தெரிவித்ததாவது:

'சட்டவாளர்களும், சிவில் பிரதிநிதிகள் சிலரும் இந்த மனுவை விரைவில் தாக்கல் செய்யவுள்ளனர். கோத்தபாய ராஜபக்ச சட்டரீதியான கடவுச்சீட்டையோ, செல்லுபடியான அடையாள அட்டையையோ கொண்டிருக்கவில்லை என்பதால், அவர் முறைப்படியாக இலங்கையின் குடிமகன் அல்ல என்ற வாதத்தின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவிடம் சட்டரீதியான கடவுச்சீட்டோ, செல்லுபடியான அடையாள அட்டையோ இல்லை. அவரது இரட்டைக் குடியுரிமை தொடர்பான ஆவணங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கோத்தபாய ராஜபக்ச இரண்டு தேசிய அடையாள அட்டைகளை வைத்திருக்கிறார். இதிலிருந்து அவரது ஆவணங்கள் மோசடியாகப் பெறப்பட்டவை என்பது உறுதியாகிறது. இதன் அடிப்படையில் அவரைத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தடை செய்ய உத்தரவிடக் கோரி மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது.'- என்றார். (ம)

# இலங்கைப் படையினர் குறித்த ஐ.நா. தீர்மானம் மீள்பரிசீலனை

## இப்படிச் சொல்கிறார் முன்னாள் தளபதி

கொழும்பு, ஒக். 1



ஐ.நா அமைதிப்படையில் இருந்து இலங்கைப் படையினரை வெளியேற்றும் முடிவு தொடர்பாக, ஐ.நா மறுபரிசீலனை செய்து வருகிறதுஎன்றுமுன்னாள் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

கண்டி - தலதா மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படையினர் பங்கேற்பது குறித்த முடிவை ஐ.நா. மறுபரிசீலனைசெய்துவருகிறது. இதுதொடர்பாக, இன்னமும் ஐ.நா. அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிடவில்லை. வேலைநிறுத்தப் போராட்டங்களினால் சீர்குலைந்துள்ள அவசர சேவைகளை மீண்டும் வழங்குவதற்கு அரசால் உதவி கோரப்பட்டால், எந்த நேரத்திலும் ஒத்துழைக்க இராணுவம் தயாராக இருக்கிறது. இலங்கை இராணுவம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது. இது தொடர்பாக ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது - என்றார். (ம)

# இன்னொரு வேட்பாளர்

கொழும்பு, ஒக். 1

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தானும் போட்டியிடவுள்ளதாக சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு அறிவித்துள்ளார். பிரிட்டனின் குடியுரிமையைக் கொண்டிருந்த அவர், எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்காக அதைத் துறந்துள்ளார் என்றும் தெரியவருகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸஹ்ரான் குழுவினருக்குப் பணம் வழங்கியமை ஒரு போர்க்குற்றமே

## சம்பிக்க கருத்துத் தெரிவிப்பு



*கொழும்பு, ஒக். 1*

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களுக்குப் பணம் கொடுத்ததை ஒரு போர்க்குற்றமாகவே கருத வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொலன்னாவவில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.தே.க. கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய ஆட்சிக்காலத்தில், புலனாய்வுப் பிரிவுகளால் ஊதியம் கொடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர்களால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது விசாரணைகளில் உறுதி செய் யப்பட்டால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்தியவர்களுக்குப் பணம் கொடுத்தமை ஒரு போர்க்குற்றமாகவே கருதப்படவேண்டும் - என்றார். (ம)



# வவுனியா வீதிகளில் தேர்தல் சுவரொட்டிகள்

வவுனியா, ஒக்.1

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் வவுனியாவில் பரவலாக வீதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வமாக அரச தலைவர் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர், அது தொடர்பான சுவரொட்டிகள் வவுனியாவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அமைப்பினூடாகப் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவின் ஒளிப்படத்தைப் பதிவிட்டு குறித்த சுவரொட்டிகள் நகரின் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

"கட்டியெழுப்புவோம் எமது நாட்டை, நம்பிக்கை தரும் நம்பகமான வேட்பாளர் அநுர, உடன் மக்கள் சபை" போன்ற வாசகங்களுடன் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடுவோம் எனப் பொறிக்கப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (க-110)

### சஜித்தின் ஆதரவாளர்களுக்கு அடையாள அட்டை

மன்னார், ஒக்.1

மன்னார் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்களுக்குப் பதவியின் அடிப்படையில் அடையாள அட்டை நேற்று வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேசங்களை மையப்படுத்தி, பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு செயலர் என்ற ரீதியில் அடையாள அட்டைவழங்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்களுக்கே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. (க)

# சின்னத்தை மாற்ற வாய்ப்பே இல்லை

## மைத்திரிக்கு மகிந்த தெரிவிப்பு



எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொதுமக்கள் முன்னணியின் தாமரை மொட்டுச் சின்னம் மாற்றப்படாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு, மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மொட்டு சின்னத்தைக் கைவிட்டுப் பொதுச்சின்னத்தில் போட்டியிட்டால்தான், கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க முடியும் என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த நிலையில் சின்னத்தைக் கைவிட முடியாது என்று மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்த ராஜபக்ச திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

மொட்டு சின்னத்தில் போட்டியிடுவதற்கு கோத்தபாய ராஜபக்ச ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்தி விட்டார் என்றும், அரச தலைவர் தேர்தல் முடிந்த பின்னர் பொதுச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேச்சு நடத்தலாம் என்றும் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ம)



# கடந்தகாலத்தில் விட்ட தவறை கூட்டமைப்பு விடவேகூடாது

## மாகாண முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் வலியுறுத்து

தலைமன்னார், ஒக். 1

இந்தமுறை அரசதலைவர் தேர்தலில் நாம் எவருக்கு வாக்காளிக்க வேண்டும் என்பது தொடர்பாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் விட்ட தவறை இந்தமுறையும் விடமுடியாது என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் அரசதலைவர் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகூறியபோது அதன்படியே தமிழ் மக்களும் வாக்களித்துமைத்திரியை அரசதலைவராக்கினோம். இந்தமுறை நாம் நிச்சயமாக வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களிக்காவிட்டால் எமக்குத் தேவையற்ற ஒருவர் அரச தலைவராக வந்துவிடுவார்.

சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயம் விடுவிக்கப்படாத தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான விடயங்கள் மட்டுமன்றி இன்னமும்தொக்கி நிற்கும் எமது அரசமைப்புச் சீர்திருத்தம், அடிப்படை உரிமைகள், எமது எதிர்காலச் சந்ததியினர் மதிப்புடன் வாழக்கூடிய சட்டங்களை உள்ளடக்கிய அரசமைப்பு ரீதியான உறுதி என பல விடயங்களை வலியுறுத்தி, கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று விரைவில்தீர்க்கமானமுடிவெடுக்கும் என்று நம்புகின்றேன்-என்றார். (து-60)

# ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் தடைப்பட்டுள்ள தொடருந்துச் சேவை



வவுனியா, ஒக்.1

நாடு முழுதும் தொடருந்து ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், மாத்தறை செல்ல வேண்டிய தொடருந்து ஒன்று வவுனியா தொடருந்து நிலையத்தில் கடந்த 4 நாள்களாகத் தரித்து நிற்கிறது.

ஊழியர்களின் போராட்டத்தால் தொடருந்துச் சேவைகள் முற்றாக முடங்கியுள்ளதுடன், இராணுவத்தினர், பொலிஸார் தொடருந்து நிலையங்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

தினமும் அதிகாலை 3.35 மணிக்கு வவுனியாவில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணிக்க வேண்டிய தொடருந்து கடந்த நான்கு நாள்களாக வவுனியாவில் தரித்து நிற்கின்றது. சம்பள முரண்பாடுகள், அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தாமை உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி தொடருந்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா தொடருந்து நிலைய அதிபர்கள், ஒழுங்காமைப்பாளர்கள், இயக்குநர்கள் உள்ளிட்ட ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (க-ரி4)

# கடற்படை முன்னாள் தளபதி விசாரணையில் சறுக்குகிறார்

## புலனாய்வுத்துறையினர் நீதிமன்றுக்கு அறிவிப்பு

தமது விசாரணைகளுக்கு முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஒத்துழைக்கவில்லை என குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தி காணாமல் செய்யப்பட்டமை தொடர்பில் வசந்த கரன்னாகொட மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் குற்றப் புலனாய்வுத் துறையினர் கடந்த வாரம் பி அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தனர். இதன்போது கரன்னகொடவிடம் சாட்சியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தாம் 6 தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் அவர் சாட்சியத்துக்காக வரவில்லை என குற்றப் புலனாய்வுத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி வசந்த கரன்னாகொட சாட்சியம் வழங்கிய போதும் செப்ரெம்பர் 20ஆம் திகதி அவர் சமூகம் தரவில்லை. தமது மனைவி கடந்த இரண்டு மாதங்களாக சுகவீன மடைந்துள்ளமையால், தம்மால் சமூகம்தர முடியவில்லை என் வசந்த கரன்னாகொட அறிவித்ததாக குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். எனினும் 19ஆம் திகதி அவர் செய்தியாளர் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்தார் என்பதை குற்றப் புலனாய்வுத் துறையினர் மன்றுக்குத் தெரியப்படுத்தினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றுக்கு போலிக் கடிதம் வழங்கிய தவிசாளருக்கு எதிராக நடவடிக்கை இல்லை

மன்னார் நகர சபை உறுப்பினர் விசனம்
சட்டப்படி அணுகலாம் என்கிறார் தவிசாளர்

யாழ்ப்பாணம், ஒக். 01
அமைச்சர் ரிசாத் பதியுதீன் இரகசியமாகப் பாவித்த வாகனம் சபைக்குச் சொந்தமானது என்று போலியாகக் கடிதம் வழங்கிய மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் மீது இதுவரையும் எந்த நிர்வாகமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சபை உறுப்பினர் பாலசிங்கம் கதிர்காமநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு காலத்தில் செட்டிகுளம் மெனிக் பாம் பகுதியின் பாவனைக்காக மீள்குடியேற்ற அமைச்சு கொள்வனவு செய்த ஓர் உழவு இயந்திரம் 2009ஆம் ஆண்டு பௌர்ணமி தினத்தன்று இறைச்சிக்காக மாடுகளை ஏற்றிச் சென்ற சமயம் மன்னார் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. அது எந்த விதமான ஆவணமும் இல்லாத நிலையில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

இது பிரதேச சபைக்குரியது என்று போலியாக ஒரு கடிதம் மன்னார் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்து நீதிமன்றம் ஊடாக உழவு இயந்திரம் வெளியே எடுக்கப்பட்டது. அதாவது சபைக்குச் சொந்தமற்ற உழவு இயந்திரம் ஒன்று சட்டச் சிக்கலில் மாட்டியிருந்த சமயம் அதனைப் பயன்படுத்தியவர்களும் அதனைப் பாவனையில் வைத்திருந்தவர்களும் நீதிமன்றில் தண்டிக்கப் படக்கூடாது என்பதற்காகவே போலியான கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த உழவு இயந்திரம் தமது சபைக்குரியதல்ல என்று சபைச் செயலர் எழுத்தில் உறுதிப்படுத்தினார். தவிசாளர் போலிக் கடிதம் வழங்கியதை செயலர் எழுத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். சபையில் இந்த இலக்கத்தில் வாகனம் இல்லை என்பதை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. வழக்கில் உள்ள ஒரு விடயத்துக்குப் போலியான உரிமைக் கோரல் கடிதம் வழங்கியமை. பொய்ச் சாட்சிகூறியதற்குஒப்பானதோடு அரச திணைக்களத்திலும் மோசடியாகவே சட்டப்படி பார்க்க வேண்டிய நிலை உள்ளது. பொய்ச்சாட்சி கூறி நீதிமன்றிலிருந்து வெளியில் எடுத்த உழவு இயந்திரம் இன்றுவரை சபை வளாகத்திலேயே உள்ளது.

குறித்த உழவு இயந்திரத்தை மீண்டும் நீதிமன்றில் ஒப்படைப்பதாக கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் இன்றுவரை மீள வழங்க சபையும் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே குறித்த விடயம் தொடர்பில் முதற்கட்டமாக நீதிமன்றப் பதிவாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதோடு அடுத்த கட்டமாக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றோம். - என்றார்.

உறுப்பினரின் கருத்துத் தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளர் சாகுல் கமீத் முகமது முஜாஹிரிடம் கேட்டபோது. "குறித்த உழவு இயந்திரம் ஓகஸ்ட் 6ஆம் திகதி தொடக்கம் பிரதேச சபைக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொண்டது தவறு எனின் நீதிமன்றுக்கு உட்பட்ட விடயம். சட்டத்தின் பிரகாரம் அனுகப்படலாம்." என்று தெரிவித்தார். (து-105)

# கொலைகாரக்கும்பலே ராஜபக்சகுடும்பத்தினர்

## நவம்பர் 17 அதிகாலை மூட்டைமுடிச்சுக்களுடன் அவர்கள் தங்காலை செல்வார்கள் என்கிறார் சஜித்



கொழும்பு, ஒக். 1
ராஜபக்ச குடும்பம் கொலைக்காரக் கும்பல். ஊழல், மோசடிகளுக்குப் பெயர்போன பட்டாளம். இவர்கள் என்னை விமர்சிப்பதற்கு எந்தத் தகுதியும் இல்லை. ' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நான் மகிந்த, கோத்தபாய மாதிரி சர்வாதிகாரி அல்லன். நான் ஜனநாயகவாதி. ஊழல், மோசடிகளுக்கு எதிரானவன். இனம், மதம், கட்சி பேதங்கள் இன்றி இந்த நாட்டிலுள்ள சகல மக்களையும் சமத்துவ அந்தஸ்துடன் அரவணைப்பதே எனது கொள்கை. குடும்ப ஆட்சி பற்றி அனுவளவேனும் சிந்திக்கவேமாட்டேன். ராஜபக்ச தரப்புக்கு நான் தூசி அல்ல. அவர்கள்தான் இந்த நாட்டு மக்களுக்கு இன்று தூசியாக மாறியுள்ளனர்.

நான் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கியதையடுத்து அவர்கள் கடும் அச்சத்தில் உள்ளார்கள். நான்அவர்களுக்குச்சவாலாகஉள்ள படியால்தான் அவர்கள் என்னையும், எனது கட்சியின் தலைமையையும் கண்டபடி விமர்சிக்கின்றார்கள்.

அரச தலைவர் தேர்தலுக்கான எனது ஜனநாயக ரீதியான கொள்கைப் பிரகடனம் விரைவில் வெளியிடப்படும். அதை மூவின மக்களும் ஏற்பார்கள். நவம்பர் 16ஆம் திகதி இந்த நாட்டின் அரச தலைவராக ஏற்று, மூவின மக்களும் எனக்கு வாக்களிப்பார்கள். நவம்பர் 17ஆம்திகதிஅதிகாலைஎனதுவெற்றி உறுதி செய்யப்படும். அன்றைய தினம் மூட்டைமுடிச்சுக்களு டன் ராஜபக்ச குடும்பத்தினர் தங்காலையில்உள்ளஅவர்களின்இல்லத்துக்கு ஓட்டம்எடுப்பார்கள்'-என்றார். (ம-22)

### கல்முனையில் நேற்று 15கிலோ கஞ்சா மீட்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது மாவடி வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 15 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதானார். கல்முனை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

## தமிழக மண்டபம் முகாமிலிருந்து ஈழத்துக்குப் படகில் திரும்பிய இரு ஏதிலிகள் கடலில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 1
இந்தியாவின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஈழ ஏதிலிகள் இருவர், படகு மூலமாக தாயகம் திரும்பிக்கொண்டிருந்தபோது, மன்னார் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் போரின்போது உயிரைக் காக்கும் நோக்கில் 2008 ஆம் ஆண்டு தமிழகத்துக்குத் தப்பிச் சென்றிருந்தவர்கள் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரசாந்த் (வயது- 30), நிஷாந்த் (வயது - 33) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நாட்டுப் படகு மூலமாக மன்னார் கடற்பரப்பை அடைந்தவேளையில் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-105)

## ஆதரவு வழங்குமாறு கோரியதாம் ஐ.தே.க.

சு.க. தகவல்

கொழும்பு, ஒக். 1
ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்கு ஆதரவு வழங்குமாறு எம்மிடம் கேட்டுக் கொண்டனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசம் தொலைநகல் மூலமும், எழுத்து மூலமும் இந்த வேண்டுகோளை விடுத்தார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை - அமைச்சர் சஜித் பிரேமதாசவும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பதற்கான பேச்சில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கோத்தாவுக்கு மட்டுமே என் தனிப்பட்ட ஆதரவு

நிமல்சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 1
தமது கட்சி எந்த முடிவை எடுத்தாலும், தாம் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கே ஆதரவு அளிப்பேன் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உபதலைவர் நிமல் சிறிபால டி சில்வா.

பதுளை மாவட்ட பொதுமக்கள் முன்னணியின் கட்சி செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்களே தடையாக இருக்கின்றனர். சுதந்திரக் கட்சியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே சஜித் பிரேமதாசவை சந்தித்துள்ளனர். அவருக்கு ஆதரவு தெரிவிக்கவும் தயாராக உள்ளனர். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் நான் அவ்வாறு செய்யமாட்டேன்'- என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# தும்பிகுளம் வனப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள்

யானைகள் எதற்காக இறந்தன என்பதைக் கண்டறிவதற்காக ஹபரணை தும்பிகுளம் வனப்பகுதியில் நேற்றுத் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

குறித்த பகுதியில் இதுவரை 7 யானைகளின் உடல்கள் [illegible]டுக்கப்பட்டுள்ளன.

எனினும் என்ன காரணத்துக்காக யானைகள் உயிரிழந்தன என்று கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்கான காரணத்தை விரைவில் கண்டறிவோம் என்று அரசு தெரிவித்துள்ள நிலையில் இராணுவத்தினர், பொலி[illegible] அதிகாரிகள் [illegible] இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய ராஜபக்ச வென்றால் தமிழருக்கு நன்மையே ஏற்படும்

## முன்னர்போன்று மோசமாகச் செயற்படார் என்றும் வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்கி நற்சான்றிதழ்

*யாழ்ப்பாணம், ஒக். 1*

**கோ**த்தபாய ராஜபக்ச வென்றால் தமிழர்கள் மீண்டும் பழைய நிலைக்குப் போய் விடுவார்கள் என்று தமிழர்கள் அஞ்சுவது புரிகின்றது. ஆனால் அவர் அவ்வாறு நடந்துகொள்ளமாட்டார் என்றே தோன்றுகின்றது. அந்தளவுக்கு உலக நாடுகள் அவரை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. அவர் அரசதலைவரானால் பன்னாட்டு ரீதியாக எமக்கு நன்மையே அல்லாது தீமையில்லை என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்" என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு; ஊடகவியலாளர் ஒருவர் அனுப்பிய கேள்விக்கு வழங்கிய பதில் என்று விக்னேஸ்வரன் அனுப்பிய கேள்வி பதில் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தமுறை அரச தலைவர் தேர்தல் மிக முக்கியமானது. அரசதலைவர் யார் என்ற அடிப்படையில்தான் பின்னர் நாடாளுமன்ற தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தல்களும் நடப்பன. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கே தமிழர்கள் வாக்களிப்பார்கள் என்றதொரு பொதுக் கருத்துண்டு. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுகாரும் ஐ.தே.கட்சிக்கு ஆதரவளித்து வந்தமையே. எப்படியுந் தமக்கே தமிழர்கள் வாக்களிப்பார்கள் என்ற எண்ணத்தில் சஜித் இருந்தால் அவர் தன்னைத்தானே ஏமாற்றுபவர் ஆகிவிடுவார்.

கோத்தபாயவைப் பொறுத்தவரையில் பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளை அவரே பெறுவார். தமிழர்கள் எவருக்கும் வாக்களிக்காமல் விட்டால் கட்டாயம் கோத்தபாயவே வெல்வார். கோத்தபாயவுக்கு எந்தத் தன்மானத் தமிழனும் வாக்களிக்க மாட்டார் என்று நான் முன்னர் கூறியுள்ளேன்.

சஜித் எந்தவித நன்மையைப் பெற்றுத் தருவேன் என்று தமிழர்களுக்கு கூறாது விட்டு தமிழர்கள் எவருக்குமே வாக்களியாது விட்டால் அது கோத்தபாயவுக்கே நன்மையாகப் போய்விடும். கோத்தபாய தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக என்ன செய்யப் போகின்றார் என்று எதுவும் கூறத்தேவையில்லை. ஆனால் சஜித் எமக்கு என்ன தரப் போகின்றார் என்று கூறாதுவிட்டு தமிழர்கள் அவருக்கு வாக்களிக்காது விட்டால் கட்டாயம் கோத்தபாய வெல்வார்.

கோத்தபாய வென்றால் தமிழர்கள் மீண்டும் பழைய நிலைக்குப் போய் விடுவார்கள் என்று தமிழர்கள் அஞ்சுவது புரிகின்றது. ஆனால் அவ்வாறு அவர் நடந்து கொள்ளமாட்டார் என்றே தோன்றுகின்றது. அந்த அளவுக்கு உலக நாடுகள் அவரை உற்று நோக்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அவர் வந்தால் பன்னாட்டு ரீதியாக எமக்கு நன்மையே அல்லாது தீமையில்லை. தற்போதிருக்கும் நிலையில் அவர் சீனாவைச் சார்ந்தே செல்ல வேண்டிய நிலையில் உள்ளார். இதை இந்தியாவும் அமெரிக்காவும் விரும்ப மாட்டார்கள். அதனால் இந்தியாவும் அமெரிக்காவும் தமிழ் மக்கள் சார்பாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அது எமக்கு நன்மைதரும்.

அமெரிக்காவுடன் 'கள்ள உறவு' கோத்தபாயவுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இருந்தாலும்கூட அமெரிக்கா கோத்தபாயவை வழி நடத்தவே பார்க்கும். அது தமிழர்களுக்குச் சார்பாகவே இருக்கும். ஏனென்றால் எமது புலம்பெயர் தமிழரின் செல்வாக்கு அமெரிக்காவில் இருப்பது கண்கூடு.

ஆகவே சஜித் எமக்குத் தரப்போவதை அவர் தெளிவாக வெளிப்படையாகக்கூற வேண்டும். அதனால் அவருக்கு வரப்போகும் சிங்களவாக்குகள் குறைந்துவிடமாட்டா. தமிழ், முஸ்லிம் வாக்குகள் அவரை வெல்ல வைக்கும். தமிழ் மக்களின் பாரம்பரிய வதிவிடங்களை ஏற்கனவே பல ஆவணங்களில் இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே பாரம்பரிய தமிழ்ப் பேசும் பிரதேசங்கள் எவை என்பதை சஜித் ஏற்க வேண்டும். அப்படியானால் அவர்களுக்கு வழங்கப்போகும் தீர்வை அவர் வெளிப்படையாகக் கூறவேண்டும். வேண்டுமெனில் புத்தரின் போதனைகளே தம்மை வழிநடத்துவதாகக் கூறி எமக்கு அவர் தரப்போவனவற்றைக் கூறி வைக்கலாம். எம்மைப் பொறுத்தவரையில் அவர் தருவதை ஏற்கும் நிலையில் நாம் இல்லை. எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட உரித்துக்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு திருப்பித்தர வேண்டும் என்பது சம்பந்தமாகவும் எமது முன்மொழிவுகளை இந்த அரசுக்கு ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. எமது மாகாண சபையும் அது பற்றித் தனது முன்மொழிவுகளைத் தெரியப்படுத்தியுள்ளது. ஆகவே சஜித் எதைத் தருவார் என்று முதலில் அவரின் தேர்தல் கால அறிவிப்பைப் பரிசீலித்துப் பார்ப்போம்.

அதன்பின் அவரின் நிலைப்பாட்டைக் கேட்டறிவோம். பின்னர் நடவடிக்கையில் இறங்குவோம். இப்போது பொறுமை காப்போம் என்றுள்ளது.

(து-21)

# பொதுக் கூட்டமும் முதியோர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக.1

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி கிழக்கு மூத்தோர் பிரஜைகள் அமைப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், முதியோர் தின நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளன.

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பிற்பகல் 3 மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் சு.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக வலி. கிழக்கு வட பகுதி கூட்டுறவுச்சங்கத் தலைவர் கந்தசாமி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறுவர்களின்கலை, கலாசார நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

வயது அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 6 முதியோர் மதிப்பளிக்கப் படவுள்ளனர். அத்துடன் புதியநிர்வாகிகளும்தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(ஐ)

# புதிதாக இணைக்கப்பட்ட அதிபர்களுக்கு சேவைப்பயிற்சி நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.1

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அதிபர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சிகள் நாளை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகட்டமைப்பின் தரத்தை மேம்படுத்துவதற்காக தகைமைகளுடன் கூடிய சிறப்புத் தலைமைத்துவமற்றும் முகாமைத்துவத் திறமைகளுடனானஅதிபர்களை உருவாக்கும் நோக்கில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை அதிபர் சேவை யின் மூன்றாம் வகுப்புக்காக புதிதாக ஆயிரத்து 858 அதிபர்கள்சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி குறித்த அதிபர்களுக்கான ஆரம்பச்சேவைக்கான பயிற்சிகள் நாளை ஆரம்பமாகி, எதிர்வரும் 13 ஆம் திகதி நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள் நான்கு கட்டங்களாகநடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இதன் பிரகாரம் முதற் கட்டத்தின் கீழ் அதிபர் பயிற்சிக்காகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மகரகம தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் மகரகம மத்திய கல்லூரியில்கல்விஅமைச்சின் செயலர் எம்.என். ரணசிங்க தலைமையில் நடைபெறவுள்ளன.

புதிய அதிபர்களுக்கு வலயக்கல்வி அலுவலகத்திலும் ஒரு நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டத்தின் கீழ் மாகாணப் பிரதிநிதிகளின் தொடர்பாடலின் ஊடாக பாடசாலைகளுக்கு இணைத்துக் கொண்டு இரு வார பயிற்சிவழங்குவதற்கும், மூன்றாம்கட்டமாகமாகாணப் பயிற்சி மத்திய நிலையத்தில் இரு வார வதிவிடப்பயிற்சிவழங்குவதற்கும், நான்காம்கட்டமாக வேலை செய்யும் 7 நாள்களுக்கு பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# பச்சைபுல்மோட்டையில் வெடிப்பொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஒக்.1

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பச்சைபுல்மோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போர்க் காலத்தில் கைவிடப்பட்ட வெடிப்பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பச்சைப்புல்மோட்டை குளம் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக கனரக இயந்திரம் கொண்டு குளத்தின் கரைப் பகுதி துப்புரவு செய்யும் பணிகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே கைக்குண்டு, ரவைதாங்கி, ரவைக்கூடுஎன்பனமீட்கப்பட்டுள்ளனஎன்றுமுல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (து-ரி3)

# ஆர்ப்பாட்டங்களால் நாடு சீர்குலைந்து விட்டது

## *லக்ஷ்மன் யாப்பா கவலை*



கொழும்பு, ஒக்.1

நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின் ஊடாக நாடு சீர்குலைந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு தற்போது தலைமையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் இந்தப் போராட்டங்களுக்குத் தீர்வு காண முடியாது உள்ளது. அரச ஊழியர்கள் எம்மிடம் உந்துருளிகளைப் பெற்றுவிட்டு அடுத்த பக்கத்துக்கு வாக்களித்தனர். அவர்கள் அப்போது பெரும் பிழையைச் செய்துவிட்டதை இப்போது அறிந்து கொண்டுள்ளனர் - என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் வெற்றி நிச்சயம் அடித்துக் கூறுகிறார் ராஜித

கொழும்பு, ஒக்.1

வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவுடன் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாச நிச்சயம் வெற்றி பெறுவார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். கொலன்னாவையில் நேற்றுமுன்தினம் நடந்த மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சில் நடைபெற்ற அநீதிகளை எதிர்த்தே அந்த அரசில் இருந்து வெளியேறினேன். அந்த ஆட்சியை இல்லாது ஒழிக்கவே 2015ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான ஆட்சி உருவாக்கப்பட்டது. மீண்டும் பழைய யுகத்தை நோக்கிப் பயணிக்க இடமளிக்க முடியாது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பாகக் களமிறக்கப்பட்டுள்ள வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, அவரது குடும்பத்தினரை அப்பாவிகள் போன்று மக்களிடையே காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றார். போர் இடம்பெற்றபோது நாட்டை விட்டுத் தப்பியோடிய கோத்தபாய ராஜபக்ச தற்போது நாட்டின் அரச தலைவர் ஆவதற்காக மீண்டும் இங்கு வந்துள்ளார். பாடசாலைக் காலம் முதல் எனக்கும் கோத்தபாய குடும்பத்துக்கும் சிறந்த தொடர்புகள் இருந்தன. நான் பசில் ராஜபக்சவின் சிறந்த நண்பர். இருவரும் இணைந்தே பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

அவர்களின் செயற்பாடுகளை நான் சரியாக அறிந்து வைத்திருக்கின்றேன். கட்சி உறுப்பினர்களுடனோ அல்லது நாடாளுமன்றக் குழுவுடனோ கலந்துரையாடி அவர்கள் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, அவரது மனைவி சிரந்தி ராஜபக்ச, அவரது சகோதரர்கள் தலைமையிலான குழுவே முக்கிய முடிவுகளை எடுக்கின்றனர்.

அந்தக் குடும்பத்தினரால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அவர்களைச் சுற்றியிருக்கும் விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலையசைக்கின்றனர். இதுவே அந்தத் தரப்பின் செயற்பாடாகும். அவர்களை இடதுசாரி அணி என்று குறிப்பிடுவதில் எந்தப் பயனும் இல்லை - என்றார். (எ)

## அரசியல் பழிவாங்கல்களை கைவிடவில்லையாம் அரசு!

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

அரசு எமக்கு எதிரான அரசியல் பழிவாங்கலை இன்னமும் கைவிடவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனக்கு ரணில் விக்கிரமசிங்க பேசிய ஒரு கருத்து நன்றாக நினைவில் உள்ளது. 2015 தேர்தலின் போது தலவாக்கலையில் இடம்பெற்ற பரைப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுத் தருவேன் என்று கூறியிருந்தார். 50 ஆயிரம் வீடுகள் அமைத்துத் தரப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அவர்கள் 5 ஆயிரம் வீடுகளையேனும் அமைத்தார்களா என்று தெரியவில்லை. இந்திய அரசாலேயே 5 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் எத்தனை வீடுகளை அமைத்தார்கள் என்று தெரியாது. இவர்கள் அவ்வளவு வீடுகளை அமைக்கவில்லை என்பது தான் உண்மையாகும்.

சம்பளப் பிரச்சினை வந்தபோது, நான் தலைமை அமைச்சராக இருந்தேன். அதைத் தீர்க்கும் முயற்சிகளை எடுத்தபோது தான் நீதிமன்றினால் எனக்குத் தடை விதிக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் இந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவில்லை. நாம் ஆட்சியில் நீடித்திருப்போமானால் நிச்சயமாக சம்பளத்தை உயர்த்தியிருப்போம். கடந்த காலங்களில், அரசு எமக்கு எதிரான பழிவாங்கலையே மேற்கொண்டது. கோத்தபாயவை எவ்வாறு சிறையில் தள்ளுவது, பசிலை எவ்வாறு சிறையில் தள்ளுவது என்றுதான் இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எமது குடும்பத்திலுள்ள முதியவர்களைக்கூட இவர்கள் விட்டு வைக்கவில்லை. எம்மை எவ்வாறு சிறைக்குள் தள்ளுவது என்பது குறித்து மட்டுமே சிந்தித்தார்களே தவிர நாட்டுக்கு வேலை செய்ய வேண்டும் என்று இவர்கள் சிந்திக்கவில்லை - என்றார். (எ)

## அங்கவீனமுற்ற படையினரது போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஒக்.1

கொழும்பு - கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக அங்கவீனமுற்ற இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தேர்தல் காலம் என்பதால் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டது என்று இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் யு.டீ.வசந்த தெரிவித்துள்ளார். கடந்த 20 நாள்களாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகளுக்கு தீர்வு வழங்கக் கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை-போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஐக்கியதேசியக்கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச நேற்று முற்பகல் சந்தித்திருந்தார்.

இராணுவத்தினருக்கான சேவைகளை இயன்றளவு செய்யும்தான், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கோரிக்கை தொடர்பில் அமைச்சரவையில் நாளை (இன்று) கலந்துரையாடுவேன் என்றும், அமைச்சரவையில் சிறந்த தீர்வொன்றைப் பெற்றதன் பின்னர் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களை சந்திக்க தயார் என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று அவரும் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## சஜித் பெறும் வெற்றியில்தான் ஐ.தே.மு. அரசின் அடுத்த நகர்வு

### அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றியிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அடுத்த கட்டப் பயணம் தங்கியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் அனைவரும் ஒன்றிணைந்து வெற்றியை நமதாக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலரும், அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலுக்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நீண்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரச தலைவர் அதிகாரம் இருக்கவில்லை. எமது தரப்புப் பல சந்தர்ப்பங்களில் பல சவால்களுக்கு முகம் கொடுத்தது.

இந்நிலையில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் சரியான ஒரு தீர்மானம் ஒன்றை எடுத்தார். கட்சியின் பிளவுகளைத் தடுத்து ஒன்றாக்க அவர் எடுத்த முடிவின்படி தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் புதுப்பொலிவுடன் ஒன்றிணைந்து ஏனையோருக்குச் சவாலாக மாறியுள்ளது. இப்போது ஐக்கிய தேசியக் கட்சியில் பலர் ஒன்றிணைந்துள்ளனர். இது எமக்கு மிகப் பெரிய பலமாகும்.

எஞ்சியுள்ள குறுகிய காலத்தில் நாம் வேகமாகச் செயற்பட வேண்டியுள்ளது. இன்னமும் 45 நாள்களும் அரச தலைவர் தேர்தலுக்கு உள்ளது. ஆனால் இந்தக் குறுகிய காலம் எமக்குப் பிரச்சினையான விடயம் அல்ல. கடந்த அரச தலைவர் தேர்தலில் நாம் மிகக் குறுகிய காலத்தில் செயற்பட்டே எமது வெற்றியைத் தேடிக் கொண்டோம்.

தற்போது சஜித் பிரேமதாச மீதான நம்பிக்கையில் ஆதரவாளர்கள் திரண்டு வருகின்றனர். அனைத்துத் தரப்பினரும் எம்முடன் இணைந்து வருகின்றனர். இது வெற்றி பெறும் போராட்டம் - என்றார். (எ)

## எல்லைகளைத் தாண்டி சிக்கல்களை தீர்ப்பேன்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண இதுவரை காலமாக அரசியல் தலைவர்கள் கையாண்ட ஒரு எல்லைக்குட்பட்ட முயற்சிகளைத் தாண்டி, வெகு விரைவில் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்றக் குழுவினர் இணைந்த சந்திப்பு ஒன்று நேற்று அந்தக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தியாகத்தையும், அவர் என் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் காப்பாற்றும் வகையில் இந்த அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று எமது அரசை உருவாக்குவோம்.

இந்த நாட்டில் அனைத்து மக்களும், சகல இனங்களும் பாதுகாக்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் சமூக அரசியல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அரசியல் சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட்டால் மட்டுமே இனங்கள், மதங்கள் இடையே நல்லிணக்கம் உருவாகும்.

அப்படியான பயணம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே நாடு பிளவு படாது. பயங்கரவாதம், பிரிவினைவாதம் உருவாகாது. அப்போதுதான் முன்நகர முடியும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூ...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச களமிறக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றி தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்கு களிலேயே தங்கியுள்ளது. இந்த நிலையில், பிரதான முஸ்லிம் கட்சிகள் சஜித்துக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளன. அதேவேளை, பெரும்பாலான மலையகக் கட்சிகளும் சஜித்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளன. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தீர்மானம் என்னவென்பதை அறிவிக்கவில்லை.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைத்தால்தான் சஜித்தின் வெற்றி உறுதி செய்யப்படும். இதை உணர்ந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவசர சந்திப்புக்காக நேற்று அலரிமாளிகைக்கு அழைத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்தார்கள்.

இதன்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

"ஐக்கிய தேசியக் கட்சியால் அரச தலைவர் தேர்தலுக்காக முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை ஒளிவு மறைவில்லாது நாட்டு மக்கள் மத்தியில் அறிவிக்க வேண்டும்" என்று இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

"தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தைப் பொறுத்தே அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுப்போம்" எனவும் இதன்போது சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் தலைமையிலான ஐ.தே.கவுடனான இந்தச் சந்திப்பில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் உள்ளிட்ட தமிழ் மக்களின் பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் எழுத்துமூல உடன்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், "எழுத்துமூல உடன்படிக்கைகள் செய்வதைவிட தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படுத்தினால் அது நாட்டுக்கே நல்லதாக இருக்கும். அதனால்தான் அரச தலைவர் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்" என்று இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்கள். (எ-22)

## இறுதியில்...

யின் தலைவர் மகிந்த ராஜபக்ச, தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் பெற்ற ஆலோசனையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்சவின் குடியுரிமை தொடர்பான மனு நாளை மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. அந்த மனு மீது இடைக்காலத் தடை விதிக்கப்படும் பட்சத்தில் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது போகும் என்று மகிந்த ராஜபக்சவுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால் முற்கூட்டியே மாற்று ஏற்பாட்டுடன் இருப்பது நல்லது என்று மகிந்த ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதனால் மாற்று வேட்பாளர் ஒருவரைத் தெரிந்தெடுத்து வைப்பதில் ராஜபக்ச அணியினர் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி ராஜபக்ச அல்லது மகிந்த ராஜபக்சவின் சகோதரர் சமல் ராஜபக்ச அல்லது வேறு நபர் மாற்று வேட்பாளராகத் தெரிவு செய்யப்படலாம் என்று அறிய முடிகின்றது.

எனினும் கோத்தபாய ராஜபக்சவை இலங்கைக் குடிமகனாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்க வேண்டும் என்று கோரி முன்வைக்கப்பட்டுள்ள மனு நாளை 3 நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. விசாரணைகளின் பின்னர் வழங்கப்படும் தீர்ப்பிலேயே கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் போட்டியிட முடியுமா? முடியாதா? என்பது தங்கியுள்ளது.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவின் மற்றொரு சகோதரரான பசில் ராஜபக்ச தனது அமெரிக்கக் குடியுரிமையைச் சந்தடியின்றி நீக்கிக் கொண்டுள்ளார் என்றும் தகவல் கசிந்துள்ளது. கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது போகும் சந்தரப்பத்தில் தேர்தலில் போட்டியிடும் நோக்குடன் அவர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (எ-22)

## பெரமுனவில்...

விடயங்களால் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேநேரம், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் அந்தக் கட்சிக்குள் குழப்ப நிலை தோன்றியுள்ளது என்று தெரியவருகின்றது.

அரச தலைவர் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இது தேர்தல் வெற்றியில் பாதிப்புச் செல்லுத்தும் என்று கட்சியின் ஒரு சாரார் கருதத் தலைப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் வேட்பாளரை மாற்றுவது தொடர்பாகப் பேசத் தொடங்கியுள்ளனர் என்றும் அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## நீதிபதிகள்...

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி யசந்த கோதகொட மற்றும் நீதிபதி அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அந்த மனுவில் உள்ளடங்கும் காரணங்கள் அரசியல் ரீதியாக முக்கியமானவை என்பதால் அந்த மனுவை மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்துவது சிறந்தது என்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி யசந்த தெரிவித்துள்ளார். அதையடுத்து இந்த மனு 3 நீதிபதிகள் முன்னிலையில் நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பேராசிரியர் சந்திரகுப்தா தெனுவர மற்றும் காமினி விஜயங்கொட ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலரான கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வதாகக் கூறி இந்த நாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையான குடியுரிமைச் சான்றிதழைச் சமர்ப்பிக்காமல் இந்தக் கடவுச்சீட்டை அவர் பெற்றுள்ளார் என்று தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது எனத் தெரிவித்துள்ள மனுதாரர்கள், அந்தக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன சட்டத்துக்கு முரணான விதத்தில் வழங்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதனால் கோத்தபாய ராஜபக்சவுக்கு கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குவதைத் தடுக்கும் விதமான உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்றும், இந்த மனு மீதான விசாரணை முடியும் வரையில் அந்தக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துவதைத் தடுத்து, இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு மீது நாளை விசாரணை இடம்பெறும் என மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து ராஜபக்ச அணியினர் அதிர்ச்சியில் உள்ளனர் என்று தெரியவருகின்றது. (எ-22)

## ஹரிஸ்ணவி...

குளம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஹரிஸ்ணவி 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதியன்று அவளது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தாள். அன்று அவர் பாடசாலை செல்லாது வீட்டில் தனித்திருந்தபோது அந்தச் சம்பவம் நடைபெற்றிருந்தது. இறப்பு விசாரணையை மேற்கொண்ட அதிகாரி ஹரிஸ்ணவியின் உடலில் நகக் கீறல் உள்ளது என்றும், சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் வவுனியா உள்ளிட்ட வடக்கு மாகாணம் எங்கும் நீதிகோரிப் போராட்டங்கள் இடம்பெற்றன. குற்றவாளி கைது செய்யப்படவேண்டும், தண்டிக்கப்படவேண்டும் என்று பலத்த கோசங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டங்களின் பின்னர் ஹரிஸ்ணவி வீட்டுக்கு, அயல் வீட்டிலுள்ள நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற விசாரணைகளில் அவர் 6 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். 6 மாதங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். 'ஹரிஸ்ணவியின் வீட்டாருக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்ற கடுமையான உத்தரவுடன் அவர் பிணையில் வெளிவந்தார். இந்தக் கொலை தொடர்பான வழக்குத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபரின் அறிக்கை மன்றில் பாரப்படுத்தப்படவில்லை. முந்தைய வழக்குத் தவணையின்போதும் அறிக்கை மன்றில் பாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதையடுத்து வழக்கு நேற்றுவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்று வவுனியா நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமா திணைக்களத்திடம் இருந்து அறிக்கை கிடைக்காததால் வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. இது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது. 3 வருடங்கள் கடந்துள்ளன. எமக்கு நீதி கிடைக்கவில்லை. குற்றவாளி சமூகத்துடன் நடமாடிக் கொண்டிருக்கின்றார் என்று அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். (எ-110,ரி4)

## திடீரென...

ராஜபக்சவின் இலங்கைக் குடியுரிமை தொடர்பில் கேள்வியெழுப்பி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நாளை விசாரிக்கப்படவுள்ள நிலையில் இந்த ஆவணங்கள் வெளியாகியுள்ளன. (எ-22)

## சிறுவர்...

மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். வவுனியாவில் பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாகக் காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், அனைத்துத் தரப்பினரும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (எ-110)

## இதுவரை...

போட்டியிடுவோர் எதிர்வரும் 3ஆம் திகதி வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-105)

## திடீரெனத்...

தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சம்பவத்துக்குச் சற்று முன்னர் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட உந்துருளி ஒன்றில் பற்றிய தீயால் இந்த இடர் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அதேவேளை, அந்தப் பகுதியால் இறுதி ஊர்வலம் ஒன்று முன்னதாகச் சென்றது என்றும் அப்போது போடப்பட்ட வெடிகளால் இந்த இடர் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் அயலவர்கள் சந்தேகம் தெரிவித்தனர். (எ-21)

## வடக்கு...

சோதனைச் சாவடிகள் திடீரென நேற்று அமைக்கப்பட்டன. சந்தேகிக்கும் வாகனங்களை நிறுத்தி இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வாகனங்களின் இலக்கங்களையும் பதிவு செய்தனர். அதைவிட வேறு இடங்களில் வீதிச் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கில் அம்பாறையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் நாவிதன்வெளியில் நேற்றுத் திடீரென இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர் என்று தெரியவருகின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அடுத்து நாட்டில் வேறு இடங்களில் இல்லாத அளவுக்கு வடக்கு - கிழக்கில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. அப்போது ஆனையிறவு, நாவற்குழி, சங்குப்பிட்டிப் பாலம் ஆகிய இடங்களில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டதுடன், பொதுமக்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அண்மையிலேயே சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டிருந்தன.

தற்போது திடீரென சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களின் இயல்பு நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது. (எ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது பாலஸ்தீனம் ஆக்கிரமிக்கப்படுகிறது

## இந்தியா, இஸ்ரேல் அராஜகத்தை கண்டித்து ஐ.நா.வில் உரை

நியூயோர்க்,ஒக்.1

இந்தியாவால் காஷ்மீர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று மலேசியாவின் தலைமை அமைச்சர் துன் மகாதீர் மொஹமட் தெரிவித்தார்.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்து வருகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் 74ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

காஷ்மீர் விவகாரம் தொடர்பில் ஐ.நாவில் தீர்மானம் உள்ள போதிலும், அந்தப் பகுதி வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த ஆக்கிரமிப்பின் பின்னணியில் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனாலும் இந்தியா மேற்கொண்ட இந்த நடவடிக்கை மிகத் தவறானது என்று மகாதீர் மேலும் தெரிவித்தார். அத்தோடு அமைதியான வழிமுறைகளின் மூலம் காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், அவ்வாறில்லாத பட்சத்தில் ஐ.நாவின் கோரிக்கைகளைப் புறக்கணிப்பது என்பது சட்ட நீதியை இந்தியா புறக்கணிப்பதற்கு ஒப்பானது - என்றார்.

பாகிஸ்தானுடன் இணைந்து காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா முன்வரவேண்டும் என்றும் துன் மகாதீர் மொஹமட் வலியுறுத்தி உள்ளார். மேலும் இஸ்ரேல் -பாலஸ்தீன விவகாரம் குறித்தும் மொஹமட் தனது உரையில் குறிப்பிட்டார். பாலஸ்தீன மண்ணைச் சட்டவிரோதமாகக் கைப்பற்றுவதற்கு இஸ்ரேல் முயற்சிப்பதாகவும், இத்தகைய செயலை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார். இந்தியா. இஸ்ரேல் ஆகிய நாடுகளின் அத்துமீறிய நில ஆக்கிரமிப்புகள் குறித்து உலக அளவில் கடுமையான விமர்சனங்கள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# தொழிற்சாலையில் பரவியது தீ சீனாவில் 19பேர் பரிதாபச் சாவு!

பீஜிங்,ஒக்.1

சீனாவில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீயில் சிக்கி 19 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். கிழக்குச் சீனாவின் ஜேஜியாங் மாகாணத்தில் உள்ள நிங்ஹையு பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தத் தீ ஏற்பட்டது. மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு இந்தத் தீ அணைக்கப்பட்டது. தீ ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவில் ஏற்பட்ட தொழிற்சாலை விபத்துகளில் மோசமானதாக இதைக் கருதுவதாகச் சீனா தெரிவித்தது.

சீனாவில் கடந்த மார்ச் மாதம் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயால் 78 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். பின்னர் ஜூலை மாதம் நடந்த தொழிற்சாலை விபத்தில் 15 பேர் சாவடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனில் கடும் மழை!

லண்டன்.ஒக்.1

பிரிட்டனில் பெய்த கடும் மழை காரணமாகப் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் பல இடங்களில் 70 மில்லி மீற்றர் வரை மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக சுமார் 61 இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வடக்குப் பிரிட்டனே இதில் கடுமையான மழைப்பொழிவைச் சந்தித்துள்ளது. கோன்வால், டிவாம், சோமர்செட், சஸ்செஸ் ஆகிய பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் தகவல் தொழில்நுட்ப பரிமாற்றச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் தொடருந்துச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

# சிலியில் நிலநடுக்கம்

சான்டியாகோ,ஒக்.1

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. சிலியின் தலைநகருக்கு அருகே அமைந்துள்ள டால்கா நகருக்கு மேற்கே 134 கிலோ மீற்றர் தூரத்தில், 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 7.2 ஆகப் பதிவானதாக முதலில் தகவல்கள் வெளியாகின. பின்பு இது 6.8 ரிக்டர் அளவில் ஏற்பட்டதாகத் தொிவிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டில் 8.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கமும், 1960ஆம் ஆண்டு 9.5 ரிக்டர் அளவிலான மிகப்பெரிய நிலநடுக்கமும் சிலியில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காஷ்மீரில் எதிரொலிக்கிறது இம்ரான் கானின் ஐ.நா .பேச்சு

## இந்திய ஊடகங்களின் புலனாய்வு இது!

புதுடெல்லி,ஒக்.1

இந்தியாவின் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் பல இடங்களில் மக்களால் போராட்ட முயற்சிகள் நடந்து அவற்றைத் தடுப்பதற்கு இராணுவம் முயன்றதால் இரண்டு தரப்புகளுக்கும் இடையே மோதல் உண்டானது.

இது குறித்து இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுகையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் ஆற்றிய உரையின் தாக்கம் இந்திய நிர்வாகத்தின் கீழ் உள்ள காஷ்மீரில் எதிரொலிக்கிறது என்று செய்தி வெளியிட்டன. இம்ரான் கானின் பேச்சுக்குப் பிறகு இந்திய நிர்வாகத்தின் கீழ் உள்ள காஷ்மீரில் அவருக்கு ஆதரவான மனநிலை அங்கு வாழும் மக்களிடையே உருவாகியுள்ளதை உணர முடிகிறது என்று அந்த ஊடகங்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

இம்ரான் கான் காஷ்மீர் குறித்துப் பேசியதற்கு ஆதரவாக அங்கு பேரணிகளும் ஊர்வலங்களும் நேற்றுச் சனிக்கிழமை நடந்தன, என்றும் இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன.

ஆனால், இந்தியாவின் ஆளுகைக்குக் கீழ் உள்ள காஷ்மீருக்கு அளித்துவந்த சிறப்பு அரசமைப்பை இந்தியா நீக்கியதிலிருந்து காஷ்மீரில் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திவருவதும் அங்கு குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் அவர்களை ஒடுக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.



ஹொங்கொங்கில் இடம்பெற்ற போராட்டத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பைச் சித்திரிக்கும் முகமூடியை அணிந்த போராட்டக்காரர் ஒருவரைப் பொலிஸார் தாக்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாலின் கொலைக்கு நானே பொறுப்பு ஆனால் குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன்

## இப்படிச் சொல்கிறார் சவூதி இளவரசர்

றியாத்,ஒக்.1

பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியின் கொலைக்குச் சவூதியின் தலைவர் என்ற வகையில் நான் முழுப் பொறுப்பு ஏற்கிறேன். ஆனால், ஜமால் கொலையில் என் மீதான குற்றச் சாட்டுகளை நிராகரிக்கிறேன் என்று சவூதியின் இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்தார்.




இது குறித்து மேலும் தெரியவருவதாவது: தொலைக்காட்சி ஒன்றுக்குச் சவூதி இளவரசர் அளித்த செவ்வியில், 'ஜமாலின் கொலைக்குச் சவூதி தலைவர் என்ற பொறுப்பில் நான் முழுப் பொறுப்பு ஏற்கிறேன். ஆனால் ஜமால் கொலையில் என் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறேன்- என்றார்.

**பின்னணி**

ஜமால் கஷோக்ஜி சவூதியின் புகழ்பெற்ற பத்திரிகையாளர். 1980 களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர். அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவூதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களை விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூத ரகத்துக்குச் சென்றார். அந்த அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் அவர் கொல்லப்பட்டார். இந்த வழக்குத் தொடர்பாக, சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டது. ஜமாலை சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், அதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டது. ஜமாலின் கொலை பின்னணியில் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் இருப்பதாகவும் கூறியது. ஜமால் கொலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலும் ஜமாலின் மரணத்தில் சவூதி இளவரசருக்குப் பங்கு இருக்கிறது என்று தெரிவித்திருந்தது.



# பிரிட்டன் ராணியிடம் மன்னிப்புக் கேட்டார் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன்

லண்டன்,ஒக்.01

பிரிட்டனின் நாடாளுமன்றத்தை முடக்கியது சட்ட விரோதமானது என்று பிரிட்டனின் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்துப் பிரிட்டனின் ராணி எலிசபெத்திடம் மன்னிப்புக் கோரினார் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன். 'பிரெக்சிட்' விவகாரம் காரணமாகப் பிரிட்டனின் நாடாளுமன்றத்தை 5 வார காலத்துக்கு முடக்கிய போரிஸ் ஜோன்சனின் நடவடிக்கையை ராணி இரண்டாம் எலிசபெத் ஏற்றார்.

இதை எதிர்த்து , 'பிரெக்ஸிட்' எதிர்ப்பாளரான ஜினா மில்லர், வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் நாடாளுமன்ற முடக்கம், சட்டவிரோதமானது என்று தீர்ப்பு அளித்தது.

இது ராணி இரண்டாம் எலிசபெத்மகாராணிக்கு தர்ம சங்கடமாக அமைந்தது. இது தொடர்பாகவே போரிஸ் ஜோன்சன், அவருடன் தொலைபேசியில் பேசியதுடன் இதற்காகக் கவலை தெரிவித்து மன்னிப்புக் கேட்டதாகப் பிரிட்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# பதவி விலகேன்!

லண்டன்,ஒக்.1



எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் பதவி விலகப்போவதில்லை என்று மிக உறுதியாகத் தெரிவித்தார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் பொரிஸ் ஜோன்சன். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'பிரெக்சிட்' விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதியுடன் பிரிட்டன் எப்படியாவது வெளியேறிவிடும் என்றும் ஜோன்சன் ஆணித்தரமாகக் கூறினார். இந்த நாடு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டிருக்கிறது.

அதனைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது. ஆகவே நான் எந்த நிலமையிலும் பதவி விலக மாட்டேன் எனவும் அவர் உறுதி அளித்தார். இந்த 'பிரெக்சிட்' விவகாரச் சவாலை எதிர் கொள்ளும் பிரிட்டனின் இரண்டாவது தலைமை அமைச்சர் ஜோன்சன் ஆவார்.

இவருக்கு முன்னர் பிரிட்டனின் தலைமை அமைச்சராக இருந்த தெரேச மே இந்த 'பிரெக்சிட்' விவகாரத்தில் நாடாளுமன்றின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பல தடவைகள் முயன்று அவை தோல்வியடைந்த நிலையில் பதவி துறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சவூதி அரசரின் மெய்க் காப்பாளர் சுட்டுக் கொலை

றியாத்,ஒக்.1

சவூதி அரேபியாவின் அரசர் சல்மானின் மெய்க் காப்பாளர் அவரது நண்பரால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜென் அப்தெல் அசிஸ் வ்பகாம் என்னும் பெயருடைய அந்தக் காப்பாளர் கடந்த சனிக்கிழமை இரவு தனது நண்பரின் வீட்டுக்குச் சென்றபோது அவரால் சுடப்பட்டார். இவருக்கும் மம்தபின்மேஷால் அல் அலி என்பவருக்கும் இடையே இருந்து வந்த முரண்பாடே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜென் வ்பகாம் சவூதி மக்களிடம் நன்கு அறியப்பட்டவர். அவர் அரசர் சல்மானுக்கு மிகவும் நெருக்கமானவர். நீண்ட நாள்களாகப் பணியில் இருந்த அவர் மறைந்த அரசரான அப்துல்லாவுக்கும் மெய்க் காப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஏமனில் போரை நிறுத்துங்கள் சவூதியிடம் ஈரான் வலியுறுத்தல்

தெஹ்ரான்,ஒக்.01

ஏமனில் நடத்திவருகின்ற வான் தாக்குதல்களைச் சவூதி நிறுத்த வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறும் போது, வளைகுடாப் பகுதியில் பதற்றத்தைத் தணிப்பது தொடர்பாகச் சவூதியிடமிருந்து எவ்வித அறிகுறிகளும் வெளிப்படவில்லை. அவர்கள் ஏமனில் நடத்தும் வான் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.



**பின்னணி**

ஏமனின் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி ஆயுததாரிகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டில் இருந்து உள்நாட்டுப் போர் நடக்கிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரேபியா செயற்படுகிறது. ஹவுத்தி ஆயுததாரிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. இந்த உள்நாட்டுப் போரால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் சவூதியின் எண்ணெய் நிறுவனங்களை ஹவுத்தி ஆயுததாரிகள் தாக்கினர். இதனைத் தொடர்ந்து ஏமனில் தாக்குதலைத் அதிகப்படுத்தியுள்ளது சவூதி.

# கச்சா எண்ணெய் விலை உயரும்

## சவூதி இளவரசர் எச்சரிக்கை

றியாத்,ஒக்.01

நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்குக் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும் என்று சவூதியின் இளவரசர் முகமது பின் சல்மான் எச்சரிக்கை விடுத்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஈரான் மீது உலக நாடுகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உலக நாடுகளின் நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான நிகழ்வுகள் நடைபெறுவதை நாம் பார்க்கக்கூடும்.

எண்ணெய் வழங்கலில் பிரச்சினை ஏற்படும். இதனால் நாம் நினைத்துப்பாாக்க முடியாத அளவில் எண்ணெய் விலை அதிகரிக்கக்கூடும். மத்திய கிழக்குப் பிராந்தியம்தான் உலகின் ஆற்றல் தேவைகளில் 30சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது. உலகத்தின் 20சதவீத வர்த்தகம் இங்கே நடைபெறுகிறது.

ஆகவே இவற்றில் சிக்கல் ஏற்பட்டால் பொருளாதாரம் சிதைந்துவிடும். இது சவூதி அரேபியா அல்லது மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டுமான பிரச்சினை என்றார்.

அத்தோடு சவூதி எண்ணெய் நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்து அவர் கூறும்போது, இந்தத் தாக்குதலின் பின்னணியில் ஈரான் தான் உள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் 12வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கால்பந்தாட்ட பயிற்சி முகாம் நேற்று திங்கட்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது, மேற்படி கால்பந்தாட்ட பயிற்சி முகாமில் சுமார் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.1

முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவதுஆண்டுநிறைவை வடமாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிலாவத்தை இளம் பறவைகள்விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணிவெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு முன்னேறி யது.

இரண்டாவது ஆட்டத்தில் வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் அணி மோதியது. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் முல்லைத்தீவு சென்யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி, உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி, உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறி யது.

நான்காவது ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை பதிவு செய்ததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)

### ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில்

# சென். மேரிஸ் மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், ஒக்.1

மன்னார் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய டயலொக்வெற்றிக் கிண்ணத்துக்கான திறந்த பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் உள்ளக அரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஓலைத்தொடுவாய் சென்.தோமஸ்விளையாட்டுகழகஅணியை எதிர்த்துதுள்ளுக்குடியிருப்புசென். மேரிஸ் விளையாட்டு கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் முதலாவது செற் ஆட்டத்தில் ஓலைத்தொடுவாய் சென். தோமஸ் விளையாட்டு கழக அணி 25:21 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாவது செற் ஆட்டத்தில் துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 25:13 என கைப்பற்றியது.

மூன்றாவது செற் ஆட்டத்தில் ஓலைத் தொடுவாய் சென். தோமஸ் விளையாட்டு கழக அணி 25:23 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது.

நான்காவது செற் ஆட்டத்தில் துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 25:19 என்ற செற் கணக்கில் கைப்பற்ற ஆட்ட விறுவிறுப்பானது.

ஐந்தாவது செற் ஆட்டத்தை துள்ளுக் குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டு கழக அணி 15:12 என்ற செற் கணக்கில் கைப்பற்றி 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (23)

### கராத்தே போட்டியில்

## முரளி பரிதியனுக்கு தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக்.1



இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத் தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை தற்காப்பு கலையக மாணவன் முரளி பரிதியன் ஓர் தங்கப்பதக்கத்தையும், ஓர் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினார்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் 11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும், காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (23)

## வட மாகாண கராத்தே போட்டியில் இருவர் தங்கம், வெள்ளி வென்றனர்

இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ரநஷனல் மாணவர்கள் ஓர் தங்கப்பதக்கம், ஓர் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினர்.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண கராத்தே போட்டியில் கே.புவிந்தன் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 7.6கியுபிரிவில்55கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், மேனுஷன் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 7.6 கியு பிரிவில் 68 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)







## மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

வட மாகாண காரத்தே சம்மேளனத்தால் ஒவ்வொரு வருடமும் மூத்த காரத்தே ஆசிரியர்களை மதிப்பளித்து வருகின்றது. அந்த வரிசையில் 2019ஆம் ஆண்டுக்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சென் செய் கபிரியல் றேன்மன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த சென் செய்சிகனகலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியின் பெரும் சமரில் இன்னிங்ஸ் வெற்றியுடன்

# கிண்ணத்தைக் கைப்பற்றியது கிளி. மகாவித்தியாலய அணி

வன்னியின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான 9 ஆவது கிளிமுல்லை நட்புக் கிண்ணத்துக்கான கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய புதுகுடியிருப்பி மத்திய கல்லூரி அணி 20பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கோபிதன் 6 இலக்குகளையும், யசிக்குமார் 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பொடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 53 பந்துப் பரிமாற்றங்களில் 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யசிக்குமார் 85 ஓட்டங்களையும், பிரவிந்தன் 21 ஓட்டங்களையும் கோபிதன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர் .

120 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 28.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணி சார்பில் ராஜ்கீரன் 20 ஓட்டங்களையும், விஜிதன் தர்சன் தலா 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கோபிதன் 5 இலக்குகளையும், யசிக்குமார் 3 இலக்குகளையும் பிரனித்,அனுசியன், ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் ஆட்டநாயகன்,தொடராட்ட நாயகன் விருதை கிளிநொச்சி மகாவித்தியாலய வீரர் யசிக்குமார் பெற்றுக் கொண்டார்.

சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கோபிதன் பெற்றுக் கொண்டார். சிறந்த களத் தடுப்பாளருக்கான விருதை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வீரர் ராஜ்கீரன் பெற்றுக் கொண்டார். (23)





## வளர்மதி - இந்து இளைஞர் இறுதியில் பலப்பரீட்சை

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அரச தலைவர் தங்க கிண்ணத்துக்கான திறந்த பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## ‘போர்முலா–1’ கார் பந்தயத்தில் ஹேமில்டன் முதலிடம்

‘போர்முலா-1’ உலக கார்பந்தயத்தில் இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹேமில்டன் சம்பியனானார்.

இந்த ஆண்டுக்கான ‘போர்முலா -1’ கார்பந்தயம் உலகம் முழுவதும் 21 சுற்றுகளாக நடத்தப்படுகிறது.

இதன் 16 ஆவது சுற்றான ரஷ்யா கிராண்ட்பிரி பந்தயம் சோச்சி ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பந்தய தூரமான 309.745 கிலோ மீற்றர் இலக்கை நோக்கி 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் கார்ப் பந்தயத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹேமில்டன் முதலிடத்தைப் பெற்றார். இது இந்த தொடரில் இவரின் 9 ஆவது வெற்றியாகும். பின்லாந்து வீரர் வால்டெரி போட்டாஸ் 2ஆவது இடத்தையும், தகுதி சுற்றில் முதலிடத்தை பிடித்த மொனாக்கோ வீரர் சார்லஸ் லெக்லெர்க் 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

கரம் போட்டியில்

## கொக்குவில் இந்துவுக்கு வெள்ளிப் பதக்கம்

இலங்கை கரம் சம்மேளனம் நடத்திய இளநிலை பிரிவினருக்கான தேசிய மட்ட கரம் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று திங்கட்கிழமை கொழும்பு நுகேகொட உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு மகா மாய பெண்கள் கல்லூரி அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை பிரதிநிதித்துவம் செய்த பவதாரணி, டிசாந்தி ஆகியோரை எதிர்த்து கொழும்பு மகா மாய பெண்கள் கல்லூரி அணியை பிரதிநிதித்துவம் செய்த தாருசி, நுவந்திகா மோதினர். இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை பிரதிநிதித்துவம் செய்து விளையாடிய பவதாரணி, டிசாந்தி இணை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினர். (422-23)



## காமாட்சி அம்பாள் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக்.1

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின் ஒளியில் இடம் பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதலாவது செற்ஆட்டத்தில் இரண்டு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தால் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. இறுதியில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 33:31 என்ற செற் கணக்கில் முதலாவது செற் ஆட்டத்தைக் கைப்பற்றியது.

இரண்டாவது செற் ஆட்டத்தில் புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழக அணி 25 : 20 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது.

மூன்றாவது செற் ஆட்டத்தில் புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழக அணி 25:16 என்ற செற் கணக்கில் அடிப்படையில் கைப்பற்றியது. நான்காம் செற் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 26:24 என்ற செற் கணக்கில் கைப்பற்றியது. ஐந்தாவது செற் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 15:10 என்ற புள்ளி அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (23, 422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் பாக். வெற்றி

ராசி அதிர்ஷ்டம்
திகதி 30.09.2019 | வெற்றி வாரம் 2633 | வர்ணம் மஞ்சள்
மேடம்
வெற்றி இலக்கங்கள் 05 27 42 57
செவ்வாய் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 334, 692/=
01.10.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 501 | திகதி: 2019 செப்ட். 29
வர்ணம்: மஞ்சள் | ஞாயிறு
T 01 28 37 46
வாசி தகை 3 6 0 2 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 141,770,923/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 747
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.09.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,930,760/-
வெற்றி இலக்கங்கள் 11 27 68 70 B
SEASON விசேட வெற்றி இல. 9755

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3242 | திகதி: 2019.09.30 | திங்கட்கிழமை | நீலம்
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 01 13 50 66 I
போனஸ் இலக்கம் 33
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 62,819,190/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1049
சீட்டிழுப்பு திகதி 2019.09.29 ஞாயிற்றுக்கிழமை
D 07 51 52 57
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## மரண அறிவித்தல்



மண்ணில் 20 . 01 . 1950
விண்ணில் 27 . 09 . 2019

### குமாரநாயகம் ரூபவதி

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரநாயகம் ரூபவதி அவர்கள் கடந்த (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்(பரியாரியார்) - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் குமாரநாயகத்தின் அன்பு மனைவியும் பிரசாந், யசிந்தா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மீனாட்சி இரத்தினம், கோபாலகிருஷ்ணன், நாகேஷ்வரி முத்துகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும் துரைராஜா, வசந்தி, சாந்தகுமாரன், மணூரன் சுக்குவன்ரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மதி, சகிமா, ஆஷா ஆகியோரின் அன்பு மாமியும் தயாநிதி, கலாநிதி, தயானந்தன், ஜெயனந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சித்தியும் கேசவன், டானி, அகத்தா, அஷஷீயா ஆகியோரின் மாமியாரும் சாய், சத்யா, சகியா ஆகியோரின் பெரிய தாயும் அக்ரம், மரியம், அனாஸ், அகமத், அமார், அபி, அபிஷேக், அஷத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (01.10.2019) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் 20, சட்டநாதர் வீதி, நல்லூர் முகவரியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், சகோதர சகோதரிகள்
நாகேஷ்வரி-சாந்தகுமாரன்,
சண்முகம் முத்துக்கிருஷ்ணன்.
077 202 9104
077 725 2091

British college of higher studies
எழுத, வாசிக்க, பேச
Spoken Sinhala
With Grammar
Duration-4 Months
Course fee just 6500/=
Sat & Sun- 4-5.30
Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel No:0212224550 /0761380212

British college of higher studies
IELTS
General/Academic
Life skills A1,B1 Exam
Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel No:0212224550 / 0761380212

British college of higher studies
Diploma in English
Duration-6 Months
Course fee just 6500/=
Weekdays & Weekends
Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel No:0212224550 / 0761380212

மணமகள் தேவை
இந்து, காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது நோர்வே citizen ஆக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.
மணமகன் வயது -36
076 7755885
(CS 28403)(14.17)

வேலையாள்கள் தேவை
முறுகண்டியில் இயங்கும் தனியார் உணவகத்திற்கு
- சிட்டை எழுதுனர்
- காசாளர்
- உணவு பரிமாறுபவர்
- உணவு தயாரிப்பாளர்
- மேற்பார்வையாளர்
- சுத்திகரிப்பாளர்
உடன் தேவை.
இருபாலாரும்.
தொடர்பு : 077 386 6250
(CS 27596)(4.17)

உங்கள் O/L கணிதத்தின் தரத்தை குறைந்தது ஒருதரத்திலாவது அதிகரித்துப் பெற்றுக்கொள்ளலாம்
அன்பார்ந்த பொது மாணவர்களே!
சிந்தியுங்கள் ! செயற்படுங்கள்!
இன்றும் உங்கள் சாதாரண தர கணித பரீட்சைக்கு முன் மீதமுள்ள இரண்டு மாதங்களைச் சிறப்பான பயனுள்ள மாதங்களாக மாற்றிக் கொள்ளுங்கள்.
அவ்வாறு பயனுள்ளதாய் மாற்றிக் கொள்ள
- தனிப்பட்ட படிப்புமுறை
- தண்டிக்கப்பட மாட்டாது
- தேர்வு நுட்பமும் நேர மேலாண்மையும் திறனும் கற்பிக்கப்படும்.
076 546 4009, 076 795 5841

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ஒருநாள் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை- பாகிஸ்தான் அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 3 ஒருநாள் போட்டி, 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக இடம் பெறவில்லை. இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெறுவதாக இருந்தது. எனினும் காலநிலை சீரின்மையால் நேற்று திங்கட் கிழமை போட்டி மாற்றப்பட்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வலுச் சேர்த்தனர். அணியின் முதலாவது இலக்கு அணி 73 ஓட்டங்களைப் பெற்ற போதே இழக்கப்பட்டது. இணைந்தார் பாபர் அசாம். அவர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதம் கடந்து அணிக்கு மேலும் வலுச் சேர்த்தார். அவர் 4 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 115 ஓட்டங்களைக் குவித்தார். பஷர் சமான் அரைச் சதம் கடந்து அட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இறுதியில் இணைந்த இப்தர் அகமட் அதிரடி காட்டினார். அவர் ஆட்டமிழக்காது 2 ஆறு ஓட்டங்கள் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7இலக்குகளை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் டீ சில்வா அதிகபட்சமாக 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்ப இலக்குகள் மளமளவென சரிக்கப்பட்டது. அணி 28 ஓட்டங்களைப் பெற்ற போது 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது. ஆறாவதாக இணைந்த ஜெயசூரியா, சானகா இணைப்பாட்டம் வரலாற்றில் பதிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் இணைந்து 166 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் ஜெயசூரியா தனது சதத்தைத் தவற விட்டு 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சானகாவும் ஆட்டமிழக்க அணியின் வெற்றி தள்ளிப் போனது. பின்னர் இணைந்த டீ சில்வா தனியொருவராக போராடிய போதிலும் ஏனைய வீரர்கள் கைகொடுக்காது போக அணி 46.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. பந்து வீச்சில் உஷ்மன் சின்வரி அதிகபட்சமாக 5 இலக்குகளைச் சரித்தார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.



## ஜெயசூரியா – சானகா புதிய சாதனை

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ஒருநாள் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் ஜெயசூரியா - சானகா புதியதொரு சாதனையைப் படைத்தனர்.

இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்த நிலையில் நேற்று இடம் பெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணிக்கு பாகிஸ்தான் அணி 306 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

களமிறங்கிய இலங்கை அணியின் இலக்குகள் அடுத்தடுத்து சரிக்கப்பட 6ஆவது 7ஆவதாக இணைந்த ஜெயசூரியா மற்றும் சானகா இணைப்பாட்டம் வரலாற்றில் இடம்பிடித்தது. இவர்கள் இருவருக்குமான இணைப்பாட்டமாக 166 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இது இலங்கை அணியின் 6ஆவது இலக்காக இணைந்து பெற்ற அதிகபட்சமான இணைப்பாட்டமாகும். பாகிஸ்தான் அணிக்கு எதிராக வேறெந்த அணிகளும் இவ்வாறானதொரு இணைப்பாட்டத்தை பெற்றதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org